ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# மாதரொழுக்க நீதிபோதினி.

இஃது

ஸ்ரீவானமாமலை ஸ்ரீமாக்
கலியன் இராமாநுஜ ஜீயர் சுவாமிகள்
திருவடி சம்பந்தியாகிய கொச்சைநளத்தில் வசிக்கும்
Retired P. W. Inspector, S. I. R.
கஞ்சி R. முத்துசுவாமி நாயுடு அவர்களால்,
இயற்றியது.

பாளையங்கோட்டை

டார்வின் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

காப்பி ரைட் ரிஜிஸ்டர்ட். விலை அணா 4.

1912.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# மாதரொழுக்க நீதிபோதினி.

இஃது

சந்திரவமிச க்ஷத்திரிய ஆந்திரராகிய கவரவர் என்ற தேசபலிஜவாராகிய விஜயநகர ஸமஸ்தான இராஜபந்துக்களும் கஞ்சிவாரு என்ற வீட்டுப்பெயருடைய ஜனகல கோத்திரத்தில் எறகோப்ப வமிசத்தினரும் அத்தங்கி திருமலைதாத்தாச்சாரியர் திருவடிசம்பந்திகளுமாகிய இவர்கள் சில நூற்றுண்டுக்குமுன் சேரசோழ பாண்டியர்களின் இராஜாங்கங்களில் தளகர்த்தர்களாய் ஆண்டுவந்தவர்கள் சந்ததியாரும், பதினெட்டு விருதுக்களுடன் செம்புச்சிலாசாசனம்பெற்று தென்தேசத்தில் தேசாயிபட்டணசெட்டித்தலைவராகவுமிருந்த குடும்பத்தைச்சார்ந்த சுற்றத்தினரும், திருச்சூரில் காலஞ்சென்ற கொச்சி மஹாராஜாவுடைய உயிருக்குயிரானவராய் அந்த அரண்மனை தண்டுகளுக்குத் தலைவராயிருந்த கஞ்சி இராமசுவாமி நாயுடு அவர்கள் குமாரர் ஸ்ரீவானமாமலை ஸ்ரீமத் பரமாம்ஸைத்தியாதிப்படி எழுந்தருளிய ஸ்ரீமான் கலியன் இராமாநுஜஜீயர் சுவாமிகள் திருவடிசம்பந்தியாகிய சொக்கறைகுளத்தில் வசிக்கும் **S. I.** ரயில்வே **Retired P. W** இன்ஸ்பெக்டர் கஞ்சி **R.** மூத்துசுவாமி நாயுடு அவர்கள் பரோபகாரார்த்தமாக இயற்றியது.

பாளையங்கோட்டையில்

டார்லிங் அச்செந்திரசாலையிற் பதிப்பித்தனர்.

*First Edition Copies 1000.*

அணா 4.
Postage Extra.

*(Copy Right Registered.)*

*1912.*

ரு

ஸ்ரீ

சர்வம் விஷ்ணுமயம் ஜகத்.

## ஆக்கியோன் கருத்து.

இந்நாட்டிலுள்ள ஸ்திரீகள் கலியுகக்கொடுமையால் ஜாதி வருணாச்சிரம
கள்கெட்டு அற்பமான கல்வியைக் கற்றுக்கொண்டு புருஷர்களை அவமதித்
ல்லறவொழுக்கம் தவறி நடந்தும், கற்புநிலைமையும், சன்மார்க்கமும் நல்லொ
களும் தவறி நடத்தலினால் சகலஜனங்களும் அவ்வவ் வர்ணங்களுக்கேற்ற நி
மானுஷ்டானங்களும் குன்றித் தரித்திரத்துக்களாகி இம்மைமறுமைப் ப
ாயுமிழந்து உலகத்திற்கு ஆதாரமாயிருக்கின்ற நல்லமழை காலகாலங்களில்
மாக வருஷியாமல் பலாபலங்கள்கெட்டு அகவிலைகள் அதிகரிக்கப்படலால்
தை யனுபவிக்கலாயினர். ஆதலால் பதிவிரதா தருமங்களுக்கு ஏற்பட்ட
ங்களைப் பெரியோர்களைக்கொண்டு கற்றறிந்து அவ்வழியில் ஸ்திரீகள் ஒ
றவினாலேற்பட்டதென்று அறிந்து அதை ஒருவாறு தடுக்கமுயன்று அடி
யின்ற பல நூல்களின் சாரங்களை சங்கிரகமாக எடுத்துச்சேர்த்து மாதரொ
போதினி என்னும் இச்சிறு நூலை எளிய தமிழ்நடையில் அற்ப படிப்புள்
பெண்களும் ஸ்திரீகளும் எளிதிலுணர்ந்து நடந்துகொள்ளும்வண்ணம் ப
யாயங்களாகப்பிரித்து எல்லோரும் கற்கதியடையும்பொருட்டு பரோபகா
மாக அச்சிட்டுப் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதால் இப்புத்தகத்தை கனதன
ரான சகலமத கிருகஸ்தர்களும் ஒவ்வொரு கிருகத்திலுமுள்ள ஸ்திரீகளு
வமடையாத சிறுமிகளுக்கும் வாங்கிக்கொடுத்து வாசித்து நல்வழியிலொ
லச்செய்வார்களேயாகில் இகஸம்பத்தையும் பரசம்பத்தையும்பெற்று ம
ம் அழியாப்புகழோடு வாழ்வார்களென்பதற் கையமில்லை. இதை
ன பெரியோர்கள் பார்வையிட்டு எல்லாப்பெண் பாடசாலைகளிலும்
ம்படி அவசியம் செய்விக்கவேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

கஞ்சி. R. முத்துசுவாமி நாயுடு,
Retired. P. W. இன்ஸ்பெக்டர், S
கொக்க

...ண்ட விலாசக்கா...

ஸ்ரீ

## சாற்றுக்கவிகள்.

---

இஃது

ஸ்ரீமான் நல்லான் திருவேங்கடாசாரியர் சுவாமிகள் திருவடி சம்பந்தியான கூத்திபாறை என்னும் நல்லூர் விஸ்வஜ்ஞ சங்காசாரியர் குமாரர் ஸ்ரீமாந் முத்து கிருஷ்ண மதுரகவி ராமாநுஜ தமிழ்ப்பண்டிதரவர்களியற்றியது.

---

### ஆசிரியப்பா.

வாரிதி மேகலை மாநில மடமகள், எரியல்வதனமென விலங்கியது
ஒள்ளிய மற்றவ ளுத்திரீயம் போல், தெள்ளிய பொருநைச் செழுநதி புனைந்தது
மிக்கொளி யெறிக்கும் வீடுகளோங்கு, கொக்கறை குளத்திற் குளிர்மதிக் குடைக்கீழ்
ஆட்சிசெய்யு மதிபன மயர்வற, மாட்சி சால்மதிலைம் வயங்கியப் பதின்மர்
பவளவாய்மலர்ந்தபாடலிற் பயின்றோன், குவளையம்போதுறழ் குரூஉச்சுடர்மேனி
நெடியமாலிணையடி நீங்கலா மனத்தான், வடிமனு நீதி வரம்பினைக் கண்டோன்
வானமாமலை வயங்கிய குணநிதி, ஆனமெய்ம் மறையுணர் அறிஞர் சிகாமணி
கலியன் சுவாமி கடிமலரடியிணை, பொலிவுற முடிமிசைப்புகழ்பெறப் புனைந்தோன்
நாடுறு கஞ்சி ராமசாமிப் பெயர், பீடுறு நரபதி பெற்றதபோநிதி
வந்தியா நின்ற வளங்குலவுந்தென், இந்தியா ரயில்வே இன்ஸ்பெக்டர்
குலவிப கவுரவ குலத்திநுக்கணியென, நிலவிய முத்துச்சாமி நிபுணன்
பூவுலகந்தனிற் போர்த்திடு புன்மை, மாவலியிருளை வலித்திடவெண்ணி
மனிதரிற் புருடர் வழாநிலையொழுக்கும், வனிதையர் வார்பால்வழாதியலொழு
கடவுளினிலைமையுங் கதிபெறுமார்க்கமும், நிடமிகுநீதியுந் திரட்டியொன்
கடல்கடைந் தமுதங் கடநிறைத்தாங்கு, இடர்தமறன்மொழி புணர்த்தியி.

சுத்தியரூபங் காட்டிவைத்தனனால் எத்திறத்தாரு மெளிதுணர்கெனவே.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# மாதரொழுக்கநீதிபோதினி.

## கடவுள் வணக்கம்.

### நேரிசை வெண்பா.

சங்கஞ் சுடர்த்திகிரி தாங்குங் கரதலத்துச்
செங்கண் முகிலே திருமேவு—மங்களமா
மாத ரொழுக்க வழிநீதி போதினியான்
ஓத வருள்செய் துவந்து.

### கலிநிலைத்துறை.

"எண்பா லோரா நாண்மட மச்ச மிவையேதம்
பூண்பா லாகக் காண்பவர் நல்லார் புகழ்பேணி
நாண்பா லோரா நங்கையர் தன்பா னணுகாரே
ஆண்பா லாரே பெண்பா லாரோ டடைவம்மா."

கற்புடைய ஸ்திரீகளுக்கு நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் இந
ரதான ஆபரணம். இவைகளை யார் அனுஷ்டிக்கின்றார்களோ அவர்க
ஸ்திரீகள். இவற்றை எந்த ஸ்திரீகள் ஆபரணமாகக் கொள்ளாதிருக்கி
அவர்களே புருஷர்கள். அவயவ பேதமிருக்கிறதென்றாலோ பெ
ாடு சேர்ந்தவர்கள் அனுஷ்டானத்தினாலே ஆண்பாலோரோடு சேர்ந்
ாவர். ஆதலால் மேற்சொல்லுகிறபடி அவரவர்கள் நடக்கவேண்டிய
ல் வழுவாது நடந்துவந்தால் இகபரசுகமடைந்து உத்தமாடைகி
வார்களென்பது திண்ணம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

---

முதல் அத்தியாயம்.

## மேகத்தின் சிறப்பும் பிரார்த்தனையும்.

---

வெண்பா.

மெய்யுந் தருமமும் வேந்தர் நெறிமுறையும்
ஐயர் நுவல் மந்திரமு மாயிழையார்—துய்யகற்பும்
செய்கடவுள் பூசனையுஞ் சேரவிவை மேற்கொண்டு
பெய்முகிலே கந்தாம் பெரிது.

1. இராஜ நீதியும், ஸ்திரீகளின் கற்புநிலைமையும், மறையவர்களுடைய வேத மந்திரங்களும், ஸத்தியமும், தருமமும், கடவுள் ஆராதனையும் இவ்வாறும் சேர்ந்து தான் காலகாலங்களில் மேகம் வருஷிக்கக்காரணமாகின்றதென்று நன்றாய் எல்லோரும் உணர்ந்து அவ்வண்ணமொழுகிவரவேண்டும்.

2. எனதன்பின்மிகுந்த நண்பர்களே! சகல வேதஸாஸ்திரங்களின் ஸாரஸங்கிரகத்தை இந்நூலில் சுருக்கி பல அத்தியாயங்களாக எடுத்துரைத்திருப்பதை நன்றாயுணர்ந்து அவ்வண்ணம் எல்லாமங்கையர்களையும் கற்றறிந்து ஒழு[illegible] செய்ய முயல்வதோடுகூடி இம்முதலத்தியாயத்தில் சொல்லியிருக்கிற மேக[illegible]னைத் தினந்தோறும் காலைமாலைகளில் அன்போடு தியானித்துவரும்படிக்கு [illegible]ய்வேணுமாய் பிரார்த்திக்கின்றேன்.

3. எல்லா மந்திரங்களும் பகவானை ஸ்ரீய:பதியையே சொல்லுகின்றது சிலது காரணப்பெயராக நிற்கும், சிலது இடுகுறியால் வேறொரு தேவதையை உணர்த்த அத்தேவதைகளின் அந்த்ராத்மாவான நாராயணன் அந்த மந்திரங்களுக்கு ப்ரதிபாத்யனாகிறான். ஆகையால் எல்லோராலும் மோக்ஷார்த்தம் அடையப்படும் ஸ்ரீய:பதியே அப்பாகிருவென்று நன்றாய் உணர்ந்து பிரார்த்திக்கும் கேட்டுக்கொள்கிறேன்.

## மேகத்தை பிரார்த்தித்தல்.

4. பார்ப்பது, தொடுவது, முழுகுவது, குடிப்பது முதலியவைகளால் சுத்தை உண்டுபண்ணுவது ஜலங்களே ஆகையால் நாட்டில் நல்ல மழை பெய்து அதனால் தானியங்கள் விளைந்து பூர்ணமான புஷ்டாந்நம் கிடைக்கும்படி க்ருபை செய்யவேணுமென்றும், பூர்ணமான ப்ருஷ்டாகாரம் கிடைத்தால் தான் எல்லா இந்திரியங்களும் சந்தோஷத்தையடையும், அதனால் தான் புத்தி பலத்தையடையும், புத்தியும் இந்திரியமும் பலத்தையடைந்தால் அவை எல்லாக்கருமங்களையும் அநுஷ்டிக்கும் திறமையை உண்டாக்கும் ஆகையால் அந்த அப்ரசத்தைப் பிரார்த்திப்பது தாய்மார்கள் முலைப்பால்கொடுத்து குழந்தைகளை வளர்ப்பது போல் உங்கள் ரசத்தைத்தந்து எங்களைப் போஷிக்க வேண்டுமென்று அப்புவைப்பிரார்த்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

5. எல்லா வஸ்துக்களுக்கும் ஈசுவரன் ஆதாரமாவென்று சொல்லப்பட்டிருப்பதால் இந்த நாமம் அப்சப்தம் அதன் அந்தர்யாமியான நாராயணனைச் சொல்லுகிறது. சர்வகர்மங்களுக்கும் பலத்தைக்கொடுக்கவேண்டியவன் நாராயணனேயாகையாலும், சாதாரணமான ஜலங்களுக்கு இவ்வளவு பலம் கொடுக்கச் சக்தி கிடையாதாகையாலும் இந்த அப்சப்தத்தால் சொல்லப்படும் பரமாத்மாவே ஐஹிகாமுஷ்மிகபலங்களைக் கொடுக்கிறானென்பது சம்பிரதாயம் என்றுணரவேண்டியது.

---

### இரண்டாவது அத்தியாயம்.

## மாதாடவ ரொழுக்கவியல்.

---

1. மனிதனுக்கு ஐவகைக்கடனுள்ளன அவை தேவர்கடன், பிதிர்க்கடன், தினர்கடன், சுற்றத்தார்கடன், தன்கடன் என்பனவாம். இல்லறத்தான் அக் யெப்பொழுதுந் தீர்த்துவருதல்வேண்டும்.

தன்வாணச்சிரமதருமத்திற்கு முறை தப்பொருளினைத் தேடுதல்வேண் வனம் தேடிய பொருளினைத் தக்கவழியிற் செலவழித்தல்வேண்டும், என் பம், செவ்வழியொழுகுதல், தவம், கொடை, அன்பு இவற்றோடு கூடியே வண்டும், விருப்பு வெறுப்பினையொழித்து நாலாவகைப்பட்ட நல் டாறும் ஒருதலையாகத் தன்னாலியன்றவளவும் செய்தல் வேண்டும்,

3 இங்ஙனம் அறங்கோணுதொழுகுமாண்மகன், தன் சாதிக்குத்தக்க புண்ணியவுலகத்தினையே பெற்று பின்னர் பெருமுயற்சியால் புண்ணியலோக முதலியவற்றினைப் பெறுவன். இவ்வண்ணம் அரிதில்முயன்று ஆண்மகன் தேடிய வெல்லாத் தருமத்திலும் அரைப்பங்குடையனை அவ்வாண்மகனுக்கு வாழ்க்கைத் துணையாய் நின்று பூசித்துவரும் மனைவிகொள்ளை கொள்கின்றுள்.

4. மாதர்க்கு வேறு வேள்வியில்லை, வேறுபிதிர்கடனில்லை, வேறொருவிரதமோன்பும் இல்லை, இவ்வகையமாதர் கொழுநனை ஓம்புதல் செய்யவேண்டுமென்னுஞ் சத்தியமாகிய எண்ணம் ஒன்றினலேதானே தாமிச்சித்தவுலகத்தினைப் பெறுகின்றனர். ஆதலால், கற்புடைய மங்கையர்கட்கு மேலானகதி அவர்கள் கொழுநன்றான் ஆனதால் அவனிடத்து தங்கள்நெஞ்சு எப்பொழுதும் பற்றியிருத்தல் வேண்டும்.

5. நயகர்ப்புயுந்தேவயாசத்திலும், பிதிர்முதலியோர்க்குச் செய்யும் அருச்சனையிலும், மற்றுமுள்ள எவ்வகைப்பட்ட நற்கருமத்திலும் சம்யோகதபாகத்தினை மனக்கலக்க மிலமெய்பற்ற கற்புடைய மனைவி, அந்த கொண்கனைப் பூசித்தல் என்கிற ஒரு கருமத்தனுலேயே பெறுகின்றனள்.

6 மாதர்க்குக் கணவனுடனொத்த நற்சதியேயன்றிச் சத்தியமாகவே வேறொன்றுமில்லை, கொழுநனுக்கு அன்புண்டாகச்செய்வது இம்மையிலும் மறுமையிலும் அம்மனைவிக்குத் துணையாய்வருகின்றது.

7. எந்த மனைவியினிடத்துக் கொண்கன் அன்புடையவனாக இருக்கின்றானோ, அம்மாது உயிரோடிருக்கு மொழு நாளினும் இறந்தொழிந்த நாளினுஞ் சுகத்தினையே பெறுவள் ஆதலால், மாதர்க்குக் கணவனேயன்றோ தொழத்தகுப் பெருந்தெய்வம்.

8. இதுபற்றியே "தெய்வந்தொழா அள்கொழுநற்றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யுமழை" என்று பெரியோருங் கூறியிருக்கின்றார்.

9. கற்புடைய ஓர்மாது புருஷசம்ஸர்க்கத்தில், வெட்கத்தினுல் தனக்கு இஷ்டமிருப்பதாக காண்பிக்கிறதல்ல, அவள் எப்போதும் புருஷனுக்கு காம இன்பத்தையே தருவாள்.

10. ஒரு ஸ்திரீயின் ஒழுக்கம் யாதெனில், யௌவனபருவம், அழகு, ஆபரணங்களால் அலங்கரித்தல், தன் கணவனுக்கு இஷ்டமுள்ளவளாயிருத்தல், கிரகஸ்த

ஆசிரமத்துக்கு வேண்டியவைகளைக் கற்றுக்கொள்ளல் இவைகளாம். இவ்வித ஒழுக்கங்களை உடைய ஸ்திரீயானவள், ஸ்திரீகளில் இரத்னமாக அறியவேண்டும். இவ்வித ஒழுக்கமில்லாத ஒரு ஸ்திரீயானவள் ஓர் புருஷனுக்கு நோயென்றே அறியவேண்டும்.

11. கற்புள்ளவளும், குற்றமற்றவளும், பரிசுத்தமான உணவைப் புசிப்பவளும், தன் கணவனிடத்தில் அன்புள்ளவளுமான ஸ்திரீயை இலக்ஷ்மிக்கு ஒப்பானவளாக வியாசர் சொல்லியிருக்கிறார்.

12. ஓர் நல்ல ஸ்திரீயின் இலக்ஷணங்கள் யாதெனில், பர புருஷரை இச்சிக்காததும், தன் கணவனுக்குத் தலையணையாகத் தன்கைகளை நீட்டுதலும், மணமுள்ள கூந்தலை உடைத்தாயிருத்தலும், தன் கணவனிடத்தில் அன்புற்றிருந்தாலும், தன் கணவனுக்குப்பின் தூங்கி முன் எழுந்திருத்தலுமாம்.

13. அன்புள்ள ஓர் மாது தன் கணவனிடத்தில் அன்பாய்ப்பேசுவள். அவனுக்குப் பணம் கொடுத்து ஒத்தாசைசெய்வள். அவனைக் கண்டபோது கோபம் நீங்கி இன்பமுடையவளாயிருப்பாள், அவனுக்கு என்ன அவதூறு நேரிட்டபோதிலும் அதை அவளது நற்குணங்களால் மறைப்பள், அவள் தனது கணவனுடைய சிநேகிதர்களுக்கு மரியாதைசெய்து, அவனது சத்துருக்களை தூஷிப்பள், அவள் தனக்குச்செய்த உதவிகளுக்கு நன்றி உள்ளவளாயிருப்பள், தன் கணவன் வீட்டில் இல்லாதபோது வருத்தப்படுவள்.

14. ஒருவன் ஒப்பற்ற மங்கலமமைந்த பொன்னாபரணங்களணிந்துள்ள ஓர் பெண்ணை விவாகமுடித்து அவளைத்தழுவி தமது குல முறைமையை முறைப்படி பாதுகாப்பதற்காகப் புத்திரர்களைப் பெற்றபின்பு, நல்ல சிறப்புடைய தவத்தைச் செய்து யாவராலும் அடைதற்கரிய முத்தியின்பமடைதல் வேண்டும்.

15. மேன்மையமைந்த தன்மையால் திருமணமுடித்த ஓர் பெண்ணைச் சேர்ந்தால், தானமுண்டாகும், அத்தானத்தால் தபோமார்க்கம் வாய்க்கும், அத்தவப்பேற்றால் சொர்க்காதிபோகங்களும் கிடைக்கும், இவ்வுலகத்திலும் கீர்த்தியுண்டாகும், யாதோர்பழுது முண்டாகாது.

16. இந்நில வுலகத்தில் விளங்கும் தெய்வமும் சிறந்தமேகமும் கற்புள்ள மாதர்களின் உண்மை வாக்கியத்தில் கட்டுப்பட்டிருக்குமென்று சொல்வோமாயின், ஆண்மக்களும் அத்தகைய கற்புள்ள மகளிர்கட் கொப்பல்லர்.

17. "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கு மில்வாழ்வா னென்பான் றுணை" என்றும், "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கலென்றாங், கைம்புலத்தாறோம்பறலை" என்று முணர்த்தியபடி. துறவாச்சிரமத்தை யுடையோர்கட்கு வேண்டியதாயுள்ள நிகரற்றதாய் அனுபவிக்கத்தக்க பொருள்களைக் கொடுத்து, இறந்தவர்களாகிய தென்புலத்தார்கள் விரும்புகின்ற சிறந்த கடன்களைச்செய்து, பலவித தருமங்களையும் புரிந்து விருந்துபசரித்தலாகிய முறைமையைத்தவிர மானிடராய்ப் பிறந்த தன்மையாலுண்டாகும் பெரும்பயன்யாது? மேன்மையான வல்லபமுடைய ஆண்மக்களும் மிருதுவான தன்மையைப் படைத்த மாதர்களும், மனம்பொருந்தி நன்மைகளையும் தீமைகளையுமநுபவித்தல் ஊழ்வினை செலுத்தியபடியேயல்லாது வேறில்லையாகும். "உள்ளதொழிய வொருவர்க்கொருவர் சுகங், கொள்ளக்கிடையா குவலயத்தில் - வெள்ளக், கடலோடி மீண்டு கரையேறினாலென், னுடலோடு வாழுமுயிர்க்கு" என்றாராகலின். நல்ல தவமாகிய இல்லற தருமத்தை செவ்வையாக நடத்திவந்தபிறகு, உறவினர்களை நீங்கும்படி துறக்கின்ற துறவே துறவாகும்.

மாதராடவ ரொழுக்கவியல் அத்தியாயம் முற்றிற்று.

---

## மூன்றாவது அத்தியாயம்.

# மாதராடவர் நீதி.

---

1. மனைவியை உண்டிமுதலியவற்றா லுபசரித்துத் திருத்தி யுறுவித்தலுங் காத்தலும் எப்போதும் கொழுநன் கடனாகவிருக்கின்றது.

2. அறம், பொருள், இன்பம், வீடு, முதலியவற்றைப் புருஷன் அடைவதற்கு மனைவி துணைக்கருவியாயிருக்கின்றாள், அதனாலே மனைவிக்கு "வாழ்க்கைத் துணை" யென்ற பேருமாயிற்று.

3. தம்பதியர்தம்முள் ஒருவருக்கொருவர் தொடர்புரிமையும் ஒரு மனப்படுதலும் இல்லையாயின் தருமஞ் சித்தியாது, தேவர் பூசனை, பிதிர்க்கடன், அடியார்களை யோம்பல், விருந்துபசரித்தல், இவற்றை மனைவியில்லாத ஆண்மகன் செய்யலாற்றான்.

4. பொருளைத்தேடிக் கொண்டுவந்தாலும், மனைவியில்லாதவனுக்கும், நற்குண நற்செய்கையில்லாத மனைவிக்கும் இன்பத்தைச் செய்யாது துன்பத்தையே விளைவிக்கும். எவ்வகையாலும் அப்பொருள் வீணாகவே யழியும்.

5. மனைவியில்லாதவனுக்கு செய்கருமங் கைகூடாதென்பது கண்ணெதிராகக் கண்டபடியாம், ஆகவே தருமம் எவ்வாறு சித்திக்கும் என்றால்? புதல்வரைப் பெற்றுப் பிதிர் கடனைக் கழிக்கவேண்டும், அன்னமிடுதல் முதலியவற்றால் விருந்தினரை உபசரிக்கவேண்டும், பூசனை முதலியவற்றால் தேவரைக் களிப்பித்தல் வேண்டும். இவை உத்தமமான நற்குணமுங் கற்புமுடைய மனைவியில்லாதவனுக்குக் கிடைக்கமாட்டாது. ஆகையால் இல்லறத்தானுக்கு உள்ள செல்வமெல்லாம் மனைவியேயாதலின், இக்கருத்தை யுள்ளத்துவைத்துத் தக்கவன்போடு மனைவியைக் காத்தல்வேண்டும்.

6. மனைவிக்கோவெனில், கணவனையொழித்து இம்மைக்கும் மறுமைக்கும் யாதொரு சார்புமில்லையாம். ஆதலின் எல்லாவகையாலும் தன்னைக்கொண்டவன் கருத்தை யனுசரித்து, அத்தலைவனுடைய செல்வத்தினையுஞ் சுகத்தினையுங்காக்க வேண்டியபாரம் மனைவிக்கு அதிகமாகவேயிருக்கின்றது.

7. அவள் நல்ல அறிவுடையவளாகத்தக்க மார்க்கத்திற் பயிற்றுவது கொழுநன் தொழிலாகவேயிருக்கின்றது. ஆதலின் மனைவிக்குத்தக்க கணவனும் கணவனுக்குத்தக்க மனைவியும் இசையப்பெற்றால் இருவருக்கும் நன்மையேவிளைவிக்கும் அவ்வகைப்பட்டோர் சந்ததியும் மிகச்சிறந்து மேன்மையடையும் என்றறிக.

மாதராடவர் நீதி அத்தியாயம் முற்றிற்று.

---

நான்காவது அத்தியாயம்.

## மாதராடவர் தருமம்.

---

1. கணவன் முதலிய பந்துக்கள் இரவிலும் பகலிலும் ஒரு காரியத்திலும் மாதரை சுவாதீனமில்லாதவர்களாகச்செய்யவேண்டியது. அவர்கள் தீய விஷயப் பற்றுள்ளவர்களாகவிருந்தாலும் தங்கள் வசத்திலிருக்கச்செய்யவேண்டும்.

2. மாதர் இளமைப்பருவத்தில் பிதாவினாலும், யௌவனத்திற்கணவனாலும், மூப்பில் மைந்தனாலும் காக்கத்தக்கவராகையால் எக்காலமும் மாதர் சுவாதீனமுடையவரல்லர்.

3. பாலியமாயிருந்தாலும் யௌவனமாயிருந்தாலும் வார்த்திகமாயிருந்தாலும் ஸ்திரீகள் தம்தம் வீடுகளிலும், தம் மனம் போனபடி ஒரு காரியத்தையுஞ் செய்யக்கூடாது.

4. தகப்பன் கணவன் பிள்ளைகள் இவர்களில்லாமல் தாம் மாத்திரம் தனியாயிருக்கவேண்டுமென்று ஒருபோதும் நினைக்கக்கூடாது. அவர்களில்லாமல் சுதந்தரியாயிருந்தால் பிறந்த குலம் புகுந்த குலம் இரண்டையும் நிந்திக்கும்படி செய்துவிடுவார்கள்.

5. பிச்சைக்காரிகள், சந்நியாசம்பெற்ற ஸ்திரீகள், வேலைக்காரிகள், பைபிள் பாடம் சொல்லிவைக்கும் உபாத்திச்சி, தாதிகள், சிறு பெண்கள், வண்ணாத்தி, வேசி, சிநேகிதர், நாவிதச்சி ஆகிய இவர்களெல்லாம் சாதாரணமாய் ஸ்திரீகளுக்கு தூது செல்கிறவர்களாய், அநேக உயர்ந்த குடும்பங்களுக்கு அவமானத்தையும், கெடுதியையும் உண்டுபண்ணுகிறார்கள்; ஆதலால் ஓர் குடும்பத்தின் கீர்த்தி, கௌரவம், மரியாதை இவற்றைக் காப்பாற்றும்பொருட்டு, ஸ்திரீகளை மேற்சொன்னவர்களுடைய சேர்க்கைகளை ஒழித்துப் பாதுகாக்கவேண்டும்.

6. இராத்திரி காலத்தில் ஸ்திரீகள் வெளியில் போதல், தேவதாஉபவாச நிமித்தம் கண்விழிக்கிறோமென்று சாக்குச்சொல்லல், நோயாயிருப்பதாக பாசாங்குசெய்தல், இதராளுடைய வீட்டில் எப்போதும் இருத்தல், ஆட்டம், கூத்து முதலியவைகளைப் பார்க்கப்போகுதல், ஜோசியர்களிடத்தும், மந்திரவாதிகளிடத்தும், வைத்தியரிடத்தும் யோசனைசெய்தல், சாவுவீட்டுக்கும் திருவிழாவுக்கும் போதல் இவை முதலானதுகளை ஸ்திரீகள் செய்யாதபடி அப்போதைக்கப்போது தடுத்து வரவேண்டும்.

7. ஸ்திரீகள் எப்போதும் தம் வீட்டுக்காரியத்தில் சாமர்த்தியமும் சந்தோஷமுமுள்ளவர்களாயும் வீட்டிலிருக்கிற வஸ்துக்களைப் பரிசுத்தப்படுத்துகிறவர்களாயும் அதிகச் செலவில் மனமில்லாதவர்களாயும் இருக்கவேண்டியது.

8. வீட்டுக்குவேண்டிய பாத்திர முதலியவற்றைக் கொள்ளுதற்காக கொடுத்தபொருளைக் காப்பாற்றுவது, செலவிடுவது, பாத்திர முதலிய பொருளைச் சுத்திசெய்வது, வீடுவிளக்குவது, தேவபூசை முதலியவற்றிற்குதவியான காரியஞ்செய்

வது, அடுக்களைக் காரியம், வீட்டுப்பாத்திரம், படுக்கை முதலானவைகளைப் பார்ப்பது இவை முதலிய அவசியமான காரியங்களை மனைவிக்குக் கற்பித்து அவளுடைய மனம் வேறிடத்திற் செல்லாதபடி செய்யவேண்டியது.

10. கணவனுடைய ஜீவதசையில் அவனுக்கு பணிவிடை செய்வதொழிய அவனிறந்தபின்னும் வியபிசாரஞ்செய்யாமல் அவனுக்குச் சிரார்த்த முதலியவற்றையும் புண்ணிய விரதங்களையும் அனுஷ்டித்துக் கொண்டிருக்கவேண்டியது.

11. கணவன் துராசாரமுள்ளவனாகவிருந்தாலும் அந்நிய ஸ்திரீ லோலனாயிருந்தாலும் நற்குணமில்லாதவனாயிருந்தாலும் பதிவிரதையானவள் அவனைத் தெய்வத்தைப்போற் பூசிக்கவேண்டியது. ஸ்திரீகளுக்கு எக்கியம், உபவாசம், விரதம், இவை முதலான தருமங்கள் தனியாகக்கிடையாது; கணவனுக்கு சிசுருஷை செய்வதினாலேயே கற்புடைய லோகப்பதவியை யடைகிறார்கள்.

12. விதிப்படி விவாஹஞ்செய்த பர்த்தாவானவன், மாதர்களுக்கு இம்மையில் சுகத்தைக்கொடுக்கிறான். விதிப்படி அவனை உபசரித்தால் மறுமையிலும் சுகமுண்டாகிறது.

13. எந்த ஸ்திரீ மனம் வாக்குத் தேகம் இவைகளையடக்கிக்கொண்டு வியபிசாரஞ்செய்யாமலிருக்கிறாளோ அவள் பதிலோகத்தையுமடைவாள் பெரியோர்களால் பதிவிரதையென்று சொல்லவும்படுவாள்.

14. ஸ்திரீகள் வியபிசாரஞ் செய்கிறதினால் உலகத்தில் நிந்திக்கப்படுகிறதுமல்லாமல், இறந்தபின் குள்ளநரியாகவும்பிறந்து வெண்குட்டம் முதலிய கர்மவியாதிகளையே அனுபவிக்கிறார்கள்.

15. கணவனிறந்தபின்பு தானிருக்கிறவரையில் பொறுமையுள்ளவளாயும் பரிசுத்தையாயும் பர்த்தாவினுடைய ரூபத்தில் தியானமுள்ளவளாயும் மதுமாமிச பக்ஷணம் செய்யாதவளாயும் மேலான பதிவிரதையின் தருமத்தை விரும்புகிறவளாயும் இருக்கவேண்டியது.

16. கணவனிறந்தபின் பிரம்மசரிய விரதமுள்ள பதிவிரதா ஸ்திரீயானவள் பிள்ளையில்லாதிருந்தபோதிலும் வாலகில்லியர் ஜனகாதி பிரம்மசாரிகளைப்போல மோட்சமடைவார்கள்.

17. கணவனிறந்தபின்பு பரிசுத்தமான கிழங்கு, பழம், மாவு, பகவத்பிரசாதம் முதலிய சொற்ப ஆகாரத்தினால் காலத்தைப் போக்கவேண்டியது. காமவிச்சையால் மற்றொரு புருஷன் பேரையுஞ் சொல்லக்கூடாது.

18. மனைவி யிறந்துபோனல் விதிப்படி இரண்டாவது கலியாணஞ்செய்து கொண்டு தினந்தோறும் அக்கினிகருமம், தேவபூசை, பிதிர்பூசை, விருந்தோம்பல், வேதாத்தியனம் முதலிய பஞ்சமகாயெக்கியங்களை நிறுத்தாமல் தன்வயதின் இரண்டாம் பாகத்தை கிரகஸ்தாசிரமத்திலிருந்து போக்கடிக்கவேண்டியது.

19. கள்குடித்தல், துட்டர்கூட்டுறவு, கணவனைவிட்டயலூருக்குப்போகுதல், காரணமின்றி இங்குமங்கும் போகுதல், தான் விரும்பிய விடத்திற்றூங்குதல், அயலகத்தமர்தல், இவ்வாறும் மாதர்களுக்கு நிந்தையானசெய்கை யென்றறியவேண்டும்.

20. மாதர்கள் சற்புநிலையின்மையும் நிலையாமனமும் நண்பின்மையும் இயற்கையாகவுடையவராதலால் கணவனுற் காக்கப்பட்டு அவர்களுடைய சுபாவகுணந் தெரிந்து அவர்களைத் தக்கவழியில் நடத்திவரவேண்டியது.

21. மாதர்களுக்கு இந்தசுபாவம் பிரமன் சிருஷ்டித்தபோதேயுண்டானதென்றறிந்து ஆடவர்கள் அவர்கள் கேடுருமல் நடப்பதற்காக மேலானமுயற்சி செய்யவேண்டியது.

22. எந்த ஸ்திரீ திரிகரணசுத்தியுடையவளாகிக் கணவன் சொற்கடவாமல் நடக்கிருளோ அவள் இகத்தில் பெரியோர்களாலே நல்லவளென்று கொண்டாடப்பட்டவளாகி பரத்தில் கற்புடைய உலகத்தையடைவாள்.

23. புத்திர விஷயம். மாதர்களைக் காப்பாற்றுவதில் இவ்விதப்பிரயாசையிருப்பினும் நல்லபிள்ளையைப் பெற்று அதிக சுகத்தையுண்டுபண்ணுகிறபடியால் அவர்களை ஆடையாபரணத்தாலலங்கரிக்கவேண்டியது.

24. வீட்டிற்கு அழகை வருவிக்கிறவர்களான மாதர்களுக்கும் மகாலட்சுமிக்கும் யாதேனும்பேதமில்லை (செல்வமில்லாத வீடெப்படி விளங்காதோ அப்படியே மாதரில்லாத வீடு மென்றறிக.)

25. பிள்ளை பெறுவது பெற்றபிள்ளையைக் காப்பாற்றுவது நாடோறும் வந்த விருந்தினர் முதலானவரையுபசரிப்பது இவை முதலியவைகளுக்கெல்லாம் மாதர்களே காரணமாகவிருக்கிறூர்கள் என்பது பிரத்தியக்ஷமாகவேயறிந்த விஷயம்.

26. பரிசுத்தமான பிள்ளைபெறுவது அக்கினிஹோத்திரம் முதலிய தருமகாரியஞ்செய்வது மேலானபணிவிடை, புணர்ச்சி, தனக்குந் தன் பிதுர்க்களுக்கும் மோக்ஷலோக பிராப்தி இவைகளெல்லாம் மனைவி ஆதீனமாகவே யிருக்கின்றன.

27. சுபாவத்திற் தெரிந்தவனாயும், பெரியோர்களாற்சிக்ஷிக்கப்பட்டவனாயும், வேதவேதாந்தங்களையறிந்தவனாயும், ஆயுளை விரும்பினவனாயுமிருக்கிற மனிதன் ஒருபோதும் பிறன் மனையாளிடத்தில் சகவாசஞ்செய்யக்கூடாது.

28. மனையாள், பிள்ளை, கணவன், இம்மூவரும் சேர்ந்துதான் புருஷனாகிறானென்று வேதத்திற் சொல்லியிருக்கிறது (அதாவது மனையாள் பாதிசரீரமென்றும் புத்திரன் ஆத்ம சுவரூபமென்றும் கருத்து) பின்னும் வேதமறிந்தவர்கள் கணவனுக்கும் மனையாளுக்கும் பேதமில்லையென்று இருவருக்கும் ஐக்கியஞ்சொல்லுகிறார்கள்.

29. கணவனும் மனையாளும் பிரிந்திருக்குங் காலத்து நடக்கவேண்டிய தருமம். கணவனானவன் ஏதாவது காரியத்தைக்குறித்துத் தேசாந்தரம் போகும்பொழுது தான் போய்வருமளவும் மனைவியுடைய ஜீவனத்துக்குவேண்டிய பொருளைக்கொடுத்துப் போகவேண்டும் அப்படிச் செய்யாவிடில் அவள் மேன்மையுடையவளாயினும் ஜீவனத்தின்பொருட்டு இழிவான காரியஞ்செய்வாள்.

30. கணவன் தேசாந்தரம் போயிருந்தபோது அவன் கொடுத்த பொருளை வைத்துக்கொண்டு அவன் வருமளவும் உயர்ந்தபூஷண வஸ்திரங்களை நீக்கி அயலகத்திற்குச் செல்லாமலிருக்கவேண்டியது.

31. ஜீவனத்துக்காகப் பொருள் கொடுக்காமற்போய்விட்டால் இழிவில்லாத கோலமிடுதல், இராட்டினம் நூற்றல், தையல்வேலை, கல்விகற்பித்தல், முதலிய தக்க செய்கைகளால் கற்புநிலைகெடாமல் ஜீவனஞ் செய்துகொண்டிருக்கவேண்டியது. பால்கெட்டால் மறுபடியும் பாலாகாது, அரைக்காசுக்குப்போன கற்பு ஆயிரங்கொடுத்தாலும் வாராது, ஆகையால் தத்தம் கற்பு நிலைமையை மிகவும் காப்பாற்றவேண்டுவது அவசியம்.

32. குருவாக்கிய பரிபாலனம் முதலிய தருமகாரியத்திற்காக தேசாந்தரம் போன கணவனை எட்டுவருஷம் வரையிலும், ஒரு வித்தையைச் சம்பாதிக்கவும் அதனாற் புகழைச் சம்பாதிக்கவும்போன கணவனை ஆறுவருஷம்வரையிலும், மற்றொரு ஸ்திரீயை சம்பாதிக்கப்போன கணவனை மூன்று வருஷம்வரையிலும், பார்த்துவாராவிடில் அவனிருக்குமிடம் செல்லவேண்டியது.

## பொது விதிகள்.

33. கணவனை மனைவி பகைத்தால் அவளொருவருஷம் வரையிலும் பார்த்து அவள் வணங்காவிடில் அவளுக்குத் தான்கொடுத்த ஆடையாபரண முதலியவற்றை

வாங்கிக்கொண்டு அவளோடு பேசுதலும் புணர்தலும் ஒழித்துவிடவேண்டியது, ஜீவனத்துக்காக கொடுத்ததைக் கவரத்தக்கதன்று.

34. மதுபானஞ் செய்பவள், தீயநடையுள்ளவள், கணவனுக்கு மாறுபாடு செய்பவள், தீராப்பிணியினள், மிகுந்த கொடுமையுடையவள், பொருளையழிப்பவள், இவ்வகை மனைவியரை ஜீவனத்திற்குக் கொடுத்து நீக்கிவிட்டு உடனே இரண்டாவது விவாகஞ்செய்யவேண்டியது.

35. மலடியான மனைவியை எட்டுவருஷத்திற்குமேலும், சாப்பிள்ளை பெறுபவளை பத்து வருஷத்திற்குமேலும், பெண்ணையே பெறுபவளை பதினொரு வருஷத்திற்குமேலும், தீங்கு சொல்பவளை அப்பொழுதிலும் நீக்கி, வேறு விவாஹஞ் செய்துக்கொள்ளவேண்டியது. இந்த மனைவியர்களுக்கு மனமகிழ்ச்சிப் பொருள் கொடுக்கவேண்டியதில்லை.

36. கணவனுடைய நன்மையை விரும்பினவளாயும், நல்லொழுக்கமுடையவளாயும், இருந்த மனைவி பிணியினளாயிருப்பினும், வேறு விவாகஞ்செய்ய விரும்பினவன் அந்த மனைவியின் அநுமதிபெற்றுக்கொண்டு செய்யவேண்டியது. அவளையெருபோதும் அவமதிக்கக்கூடாது. அவள் பிணி நிவர்த்தியாய்விட்டால் அவளை முன்னிருந்த அன்பிலும் அதிகப்பிரியத்துடன் அவளிச்சைக்குக் கெடுதியில்லாமலின்புடன் நடத்திவரவேண்டியது.

37. குலம் நல்லொழுக்கம் இவைகளாலுயர்ந்தவனும், பெண்ணுக்குத்தக்க ரூபமுள்ளவனும், தன் சாதிக்குத் தக்கசாதியுள்ளவனுமிருக்கிறவனுக்கு தனது பெண் எட்டு வயதுக்குட்பட்டிருந்தாலும், விதிப்படி விவாகஞ்செய்து கொடுத்துவிடலாம்.

38. பெண்ணுக்குருதுகாலம் வந்துவிட்டாலும், சாமளவும் கலியாணமில்லாமல் கன்னிகையாகவே தன் வீட்டிலிருந்தாலும், இருக்கக்கூடும். குணமில்லாதவனுக்கு மாத்திரம் ஒருபோது மவளைக் கொடுக்கக்கூடாது.

39. பெண்ணானவள் தான் ருதுவானதுமுதல் மூன்றுவருஷம்வரையில் தகப்பன் தக்கவனுக்கு கொடுப்பனென்கிறதை யெதிர்பார்த்திருக்கவேண்டியது. அதற்குள் தகுந்தவனுக்குக் கொடாவிடில் குடும்பத்தாருடைய அநுமதியின்பேரில் தகுந்தவனை வரித்துக்கொள்ளக்கடவள்.

40. மனிதர்கள் தெய்வத்தினல் கொடுக்கப்பட்ட மனைவியரை யடைகிறார்களேயன்றித் தன்மனதின்படி யடையவில்லை. ஆகையால் கற்புடைய அந்த மனை

வியைக் காப்பாற்றிக்கொண்டு தேவர்களுக்குப் பிரியமான எக்கியங்களைச் செய்ய வேண்டியது. (தேவர்களால் கொடுக்கப்பட்டார் என்கிற விஷயம் சுருதியில் பிரசித்தமாயிருக்கிறது) "ஆசலம்புரி ஐம்பொறிவாளியும், காசலம்பு முலையவர் கண்ணேனும், பூசலம்பு நெறியின் புறஞ்செலாக் கோசலம் புனையாற்றணி கூறுவாம்" என்றபடி கணவனும் மனைவியும் சாமளவும் வியபிசாரதோஷம் இல்லாமலிருக்க வேண்டியது. இதுதான் மாதராடவர்களுக்குச் சுருக்கமான தருமமென்றறிய வேண்டியது.

மாதராடவர் தருமம் முற்றிற்று.

---

ஐந்தாவது அத்தியாயம்.

## விவாஹ தருமம்.

---

1. மணம் என்பது எட்டுவகைப்படும் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம், என எட்டுவகையாம். இவற்றுட் பிரம்மசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர்க்கொடுப்பது பிரமமணம். தலைமகளினத்தார்வேண்டத் தலைமகளினத்தாருட் பட்டவனைத் தீமுன்னர்க்கொடுப்பது பிரசாபத்திய மணம். ஒன்றிரண்டு பசுவுமெருதும் வாங்கிக்கொண்டு கன்னியைத் தீமுன்னர்க்கொடுப்ப தாரிடமணம். வேள்வியால் வந்த கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது தெய்வ மணம். கொடுப்பாருங் கேட்பாருமின்றி யிருவருந் தனியிடத்தெதிர்ப்பட்டுத் தாமே கூடுவது காந்தருவ மணம். பெண்ணுக்குப் பொன் பூட்டி சுற்றத்தாருக்குப் பொன் வேண்டுவன கொடுத்துக் கொள்வது அசுரமணம். பெண்ணும் பெண்ணினத்தாரும் உடன்படாமல் வலிதிற்கொள்வது இராக்கத மணம். துயின்றுழிச்சென்று கூடுவது பைசாசமணம் இப்படி அஷ்டவிதமணமென்றறிக.

2. "இல்லறமுயன்று கடன்மூன்று மினிதீர்ந்தா, லல்லலறமேவு மெதியாயிபுயர்கிற்பார், முல்லைநகை மாதர்கடி முற்றிய தினைத்தி, னெல்லையெதியாகியுணர் வுற்றிடலுமாமால்" எனறவிதியின்படி குருவல்லது தந்தையின் அனுமதி பெற்றுக்

கொண்டு தன்வருணத்திற் பிறந்தவளாயும், ஒப்பற்ற மங்கலமமைந்த லக்ஷணத்தோடுகூடியவளுமாயிருக்கிற ஒரு கன்னியைக் கலியாணஞ்செய்து கொள்ளவேண்டியது.

3. தன் தாயின் ஏழுதலை முறைக்குட்படாதவளாயும் தன் தகப்பன் கோத்திரத்திற் பிறவாதவளாயும் இருக்கிற கன்னிகையானவள் மூன்று வருணத்தாருக்கும் வைதிக காரியத்துக்கும் புத்திரனையுண்டு பண்ணுகிறதற்கும் தக்க ஸ்திரீயாக சொல்லப்படுகிறாள்.

4. சாதகர்மாதி சமஸ்காரமில்லாதவன் குலம், புருஷ பிரஜையில்லாமல் ஸ்திரீ பிரஜையாகவே பிறக்கும் குலம், வேதமோதாத குலம், தேகத்தில் நீளமான மயிருள்ளவன் குலம், மூலவியாதியுள்ளவன் குலம், கடிய ரோகமுள்ளவன் குலம், அக்கினி புஷ்டியில்லாதவன் குலம், பெருவியாதியுள்ளவன் குலம், வெண்குட்டமுள்ளவன் குலம், குஷ்டவியாதியுள்ளவன் குலம், ஆக இந்தப் பத்தையும் நீக்க வேண்டியது.

5. செம்பட்டை மயிருள்ளவள், அதிசவுயரமுள்ளவள், தீராப்பிணியுள்ளவள், மயிரில்லாதவள், உடம்பெல்லாம் மயிருள்ளவள், குரூரமாகப் பேசுகிறவள், செங்கண்ணுள்ளவள், நக்ஷத்திரம், விருக்ஷம், நதி, ஈனசாதி, மலை, பக்ஷி, பாம்பு, வேலைக்காரன், இவற்றின் பேருள்ளவள், பயங்கரமான பெயருள்ளவள், இவ்வகைக் கன்னியரை விவாஹஞ்செய்யக்கூடாது.

6. அழகுள்ளவளாயும், நல்லபேருள்ளவளாயும், பெட்டையன்னம், பிடியானை, இவற்றைப்போல் நடையுள்ளவளாயும், மெல்லிதான சரீரம், மயிர், பல், இவைகளையுடைத்தானவளாயும், சிறுகுரலுள்ளவளாயும், இருக்கிறகன்னிகையைக் கலியாணஞ்செய்து கொள்ளவேண்டியது.

7. எந்த கன்னிகைக்கு பிராதா இல்லாமலும், தகப்பன் யின்னானென்று அறியக் கூடாமலும் போய்விடுமோ அவளை இந்தக் கோத்திரத்தாளென்று அறியக் கூடாமையாலும், அவளிடத்திற் பிறக்கிற பிள்ளையை விவாஹஞ்செய்யக் கூடாது.

8. அமிர்தத்தைப்போன்ற தண்ணிய சொல்லினையுடையவளாய், அழகினிலிலட்சுமியைப் போன்றவளாய், அநேகம் பிள்ளைகளுக்கு இளையவளாகி, நறுமணம் கமழப்பெற்ற தேகத்தையுடைய பெண்ணை விவாகஞ்செய்தலே கடமையாம். தனக்கொத்த குலத்தன்றி மேம்பட்ட குலத்திலும், கீழ்ப்பட்ட குலத்திலும். வழிமுறையில்லாது மிகத்தாழ்ந்த குலத்திலும், பிறந்தபெண் அழகுள்ளவளென்று கருதி விவாகம்முடிக்கில் அம்மகன் நாசத்தையடைவன்.

9. முன்னிறந்துள்ள நமது குலப்பெரியோர்களுடைய துயரத்தையும் நரகபிருப்தியையும் நீக்கத்தக்க பழமையைக்குறித்தது சிறப்பமைந்த இல்லற தருமத்தினோடு அன்புள்ள புத்திரர்களைப் பெறுவதற்காகவே, நற்குலத்திலுள்ள லக்ஷணமமைந்த ஓர் பெண்ணை விதிப்படி விவாஹஞ்செய்யவேண்டியது.

10. தன் வார்த்தையைக் கேளாத மனைவியுடன் கூடி வாழ்தலினும் கொடிதாகிய நரகத்தில் விழுவதே சிறந்தது. "பத்தாவுக்கேற்ற பதிவிரதையுண்டாளு, லெத்தாலுங்கூடியிருக்கலாஞ் சற்றேனும், மேறுமாறாக விருப்பளேயாமாயிற், கூறாமற் சந்யாசங்கொள்." "கொடியது கேட்கினெடிய வெவ்வேலோய், கொடிது கொடிது வறுமை கொடிது, அதனினுங் கொடிது இளமையில் வறுமை, அதனினுங்கொடிது ஆற்றொணாக்கொடுநோய், அதனினுங் கொடி தன் பிலாப் பெண்டிர், அதனினுங்கொடி இன்புறவவர் கையிலுண்பதுதானே" என்றாராகலின் இலக்கணங்களனைத்தும் அமைந்து குற்றம் சற்றேனுமில்லாத நிகரற்ற ஓர் பெண்ணைத்தேடி அக்கினியின் முன்னே மணம்செய்யவேண்டும்.

11. ஒரே கோத்திரத்திலுதித்தவளையும், தேகத்தில் கொடிய வியாதியையுள்ளவளையும், பழிமொழியினையுடைய குடும்பத்திற்பிறந்தவளையும், விருப்பத்தக்க பெருமையையில்லாத பெண்பிள்ளையையும், விவாகஞ்செய்யலாகாது.

12. சுப லக்ஷணங்களையும், சுபமான சீலத்தையுமுடையளாகித்தன் வசமுள்ள கணவனாகிய தேவதையைப் பெறுதற்குச் சர்வேஸ்வரனது அநுக்கிரகத்தினால் ஒரு புருஷனுக்கு மனைவியாகிறாள்.

13. பூர்வஜன்மத்தில் எந்த ஸ்திரிகள் சுமங்கிலிகளை பற்பல அலங்காரஞ் செய்தனர்களோ அவர்களே இந்த ஜன்மத்தில் மிகரூபவதிகளாய் ஜனிக்கின்றனர்.

14. எந்த ஸ்திரீகளால் சரீரமானது புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து அலம்பப்பட்டதோ அந்த ஸ்திரீகள் லாவண்ணியமென்னும் அதிசயித்த சோபைக்கு ஓர் நதி போன்றவர்களாகவும், மிகுந்த லக்ஷணத்தைப்பெற்றவர்களுமாகின்றனர்.

15. ஸகலலோக மாதாவாகிய பெரிய பிராட்டியாரை எந்த ஸ்திரீகள் முந்திய ஜன்மத்தில் பூஜிக்கலாயினார்களோ அந்த ஸ்திரீகள் இந்த ஜன்மத்தில் நன்னடக்கையைப்பெற்றும், தன் வசமாகி பதியையுடையவர்களாகின்றனர்.

16. பதியை தன் வசமாக்கிக்கொண்டு, புகழத்தக்க சீலத்தைப் பெற்றிருக்கிற ஸ்திரீகளுக்கு, ஸ்வர்க்கபோகமும் நிரதிசயானந்த ரூபமான முக்தியும் இப்பி

OFFICE ... 3 - OCT 1912 MADRAS

றவியில் தானே உண்டாகின்றன. இவ்வித பாக்கியம் சரீரத்தின் லக்ஷணத்திற்கு பலனாகும்.

17. ஸ்திரீகள் தங்களது சரீர லக்ஷணங்களாலும், நல் நடத்தைகளாலும், தன்பதி அற்பாயுளாயிருக்கினும், அவனை தீர்க்காயுளையுடையவனாகவும் மிகுந்த ஆனந்தத்தை யடைந்தவனாகவும் செய்கின்றனர். அதாவது ஸ்திரீயானவள் சுப லக்ஷணத்தைப்பெற்றிருக்கில், அவளது பாக்கியத்தினால், புருஷன் மிகுந்த வாழ்வையடைகிறான்.

18. ஆகையால் விவேகிகளாகிய புருஷர்கள்ஸ்திரீலக்ஷணங்களைச்சாஸ்திரத்தின்படியே நன்காராய்ந்து விபரீத லக்ஷணங்களை நீக்கி சுப லக்ஷணங்களையுடையவர்களாகிய ஸ்திரீகளை விவாகம் செய்யக்கடவர்கள். ஸ்திரீஸாமுத்திரிக லக்ஷண அத்தியாயத்தில் பரக்கக்காணலாம்.

விவாஹ தருமம் முற்றிற்று,

---

ஆறவது அத்தியாயம்.

## பொது விதிகள்.

---

1. ருதுகாலக்கிரமம். மனிதனானவன் பரதாரத்தை விரும்பாமல் தன் தாரத்திடத்திடை விடாத அன்புள்ளவனாய் அவளுடைய மேற்சொல்லப்போகிற ருது காலத்தில் சேரவேண்டியது. அல்லது மற்றக்காலத்தில் அவளாலே விரும்பப்பட்டாவது அல்லது தனக்கே புணர்ச்சி விருப்பத்தாலாவது பருவகாலம் நீங்கலாகச் சேரவேண்டியது.

2. மாதர்களுக்கு ருதுகாலம் வழக்கமாய் பதினாறு நாளென்று சொல்லப்படுகிறது. அதில் மாதவிடாய் ஆனதுமுதல் நாலுநாள் பெரியோர்களாலே நிந்திக்கப்பட்டிருக்கிறது.

3. மேற்சொன்ன நாலு நாளுடன் ஏகாதசி, திரயோதசி, அமாவாசி, பௌர்ணமி விரத நாள்கள் சிரார்த்ததிதிகள் நீக்கி மற்ற தினத்தில் சேர்வதே உயர்ந்ததாகச்சொல்லுகிறார்கள்.

4. மாதவிடாய் துவக்கி 6, 8, 10, 12, 14, 16 இந்த இராத்திரிகளில்சேர்ந்தால் ஆண்பிள்ளைகளும் ஐந்துமுதல் ஒற்றைப்பட்ட நாள்களில் சேர்ந்தால் பெண்களும் பிறக்கின்றன. ஆகையால் புத்திர விருப்பமுள்ளவன் இரட்டைதினத்திற் சேரவேண்டியது.

5. புருஷனுக்குச்சுக்கிலம் அதிகமாக வெளிப்படுமானால் புத்திரனாகவும் மாதருக்குச் சுரோணிதம் அதிகமாக விருந்தால் ஸ்திரீயாகவும் இருவருக்கும் சரியாயிருந்தால் பேடியாகவும், இருவருக்கும் இல்லாமலிருந்தால் அல்லது சொற்பமாயிருந்தால் கெற்பவுற்பத்தியில்லாமையும் உண்டாகிறது. சுக்கிலமதிகரித்துச்சுரோணிதம் குறைந்திருந்தால் பிறந்தபிள்ளைக்கு பிதாவின் கூறு அதிகரித்திருக்குமென்றும் சுரோணிதத்தின் கூறு அதிகரித்து சுக்கிலத்தின் கூறு குறைந்திருந்தால் பிறந்த பிள்ளைக்கு தாயின் கூறு அதிகரித்திருக்குமென்று கூறப்படுகிறது.

6. எவன் நீக்கவேண்டியதான நாலு நாளையும் ஏகாதசி திரயோதசி இந்த நாளையும் அமாவாசி பவுர்ணமாவாசி விரத நாள் திதிநாள் இவைகளையும் நீக்கி மற்றத் தினத்திரவினில் தன் மனைவியுடன் சேருகிறானோ அவன் கிரகஸ்தனாகவிருப்பினும் பிரம்மச்சாரியாகவே சொல்லப்படுகிறான்.

கன்னியாசுல்கம் வாங்கக்கூடாதென்பது;

7. பெண்ணைப்பெற்ற தகப்பன் தெரிந்தவனாயிருந்தால் அந்தப்பெண்ணுக்காகக் கொஞ்சமேனும் பணம் வாங்கிக்கொண்டு கொடுக்கக்கூடாது. அப்படி ஆசையால் வாங்கிக்கொண்டால் பெண்ணை விற்றவனாகவே ஆகிவிடுகிறான்.

8. ஒரு பெண்ணின் கணவனேனும் தகப்பனேனும் அவனுக்கு விவாககாலத்தில் ஸ்திரீதனமாகக்கொடுக்கப்பட்ட ஆடை ஆபரணம் வாகனம் இவைகளை பின்னர்தாங்கள் உபயோகப்படுத்திக்கொண்டால் அவர்கள் அந்தப்பாவத்தினாலே அதோகதியை யடைகிறார்கள்.

பெண்ணை உபசரிக்கவேணுமென்பது.

9. எந்தப்பெண்ணின் பந்துக்கள் பணம் வாங்காமல் தானஞ்செய்கிறார்களோ அது விக்கிரயமன்று, அவர்கள்தான் அந்தப்பெண்ணிடத்தில் தயையும் அன்பும் உடையவர்களாயிருக்கிறார்கள்.

10. தந்தை கணவன் உடன்பிறந்தார் மைத்துனர் இவர்கள் க்ஷேமத்தை விரும்பினவர்களானால் பெண்டுகளை கலியாண காலத்திலும் பின்னும் பூஷணமுதலானவற்றால் உபசரித்து சந்தோஷப்படுத்தவேண்டியது.

### உடன்பிறந்தாளை உபசரிக்காவிடில் குலம் நசிக்குமென்பது.

11. எந்த வீட்டில் மாதர்கள் பூஷணமுதலியவற்றால் சந்தோஷத்தை அடைந்திருக்கிறார்களோ அந்த வீட்டில் எல்லா தெய்வங்களும் சந்தோஷத்துடன் வசிக்கின்றன. எந்த வீட்டில் அவ்வாறு பூசிக்கப்படவில்லையோ அந்த வீட்டில் செய்கிற காரியங்களெல்லாம் பலனில்லாததாகப் போய்விடுகின்றன.

12. எந்த வம்சத்தில் உடன்பிறந்தாள் முதலியவர்கள் ஆடையாபரணமில்லாததால் வியசனப்படுகிறார்களோ அந்தக்குலம் நசித்துப்போகின்றது. எந்தக் குலத்தில் அவர்கள் வியசனப்படவில்லையோ அந்தக்குலம் எப்போதும் விருத்தியடைகின்றது.

13. மேலும் மாதர்கள் தங்கள் பிதா முதலியவர்கள் உபசரிக்காததால் இந்தக்குலம் அழிந்துபோகத்தக்கதென்று எந்தக்குலத்தைச் சாபமிடுகிறார்களோ அந்தக்குலம் சூனியம் வைக்கப்பட்டதுபோல் நசித்துப்போய்விடும்.

14. ஆகையால் க்ஷேமத்தைக்கோரிய மனிதர்கள் எப்போதும் தம் வீட்டில் நடக்கும் விரதங்கள் கலியாணங்கள் இவை முதலிய விசேஷ காலங்களில் உடன்பிறந்தாள் முதலான மாதர்களைப் பூஷணம் வஸ்திரம் சாப்பாடு இவற்றினால் சந்தோஷப்படுத்தவேண்டியது.

15. கணவனும் மனைவியும் ஒத்திருந்தால் குலம் விளங்கும். எந்த வீட்டில் மனைவியினுடைய பணிவிடை முதலியவற்றால் கணவன் பரதாரத்தை நினையாமலும், கணவனுடைய அன்பு முதலியவற்றால் மனைவி பரபுருஷனை நினையாமலும் ஒருவருக்கொருவர் சந்தோஷத்துடன் இருக்கிறார்களோ அந்தக் குலத்தில் கலியாணங்கள் நிச்சயமாயுண்டாகின்றன.

16 மனைவியானவள் ஆடையாபரணத்தால் விளங்காமற்போனால் கணவனைச்சந்தோஷமுள்ளவனாகச்செய்யமாட்டாள். கணவனுக்குச்சந்தோஷமில்லாமற்போனால்புணர்ச்சிசெய்யமாட்டான். அதனால் சந்தானவிருத்தியில்லாமலே போய்விடும்.

17. அந்த மனைவியானவள் ஆடைமுதலியவற்றால் விளங்கினவளாயிருந்தால் கணவன் புணர்ச்சியால் அந்தக்குலம் விருத்தியடைகின்றது. மனைவியைக் கணவன் விரும்பாமற்போனால் அவள் பரபுருஷனோடு புணர்ச்சிசெய்யவரும், அதனால் குலமே தாழ்ந்துவிடும்.

## புணர்ச்சியைப்பற்றி.

18. விதூரனென்னும் அரசனை அவனது ராணி அவள் சடையில் மறைத்து வைத்திருந்த ஓர் ஆயுதத்தினால் கொன்றாள், காசிராஜனிடத்தன்பில்லாத அவனது பட்டமகிஷி அவள் சதங்கையில் மறைத்துவைத்திருந்த விஷத்தால் கொன்றாள்.

19. இவ்வண்ணம் தங்கள் கணவரிடத்தில் அன்பில்லாத ஸ்திரீகள் அவர்களைக் கொல்லுகிறார்கள், இன்னம் இதைப்பற்றி அதிகமாய் திருஷ்டாந்தம் கொடுப்பதால் பிரயோஜனமில்லை, ஆதலால் புருஷர் தங்கள் மனைவிகள் தங்களிடத்தில் அன்பாயிருக்கிறார்களாவென்று அநேக விதங்களால் சோதித்து அறிய வேண்டும்.

20. கணவனிடத்தன்புள்ள ஒரு ஸ்திரீயானவள் தன் ஆசையை அநேக விதமாய் வெளிக்குக்காட்டுவாள். அவை யாவையென்றால்?

(a) தன் கணவன்முன்பு, தொப்புள், கைகள், ஆபரணங்கள் இவைகளை நிமித்தமின்றி காட்டுதலும், தன் ஆடைகளை சரியாய் உடுத்தலும், சிகையை திடீரென்று தாமே அவிழ்ந்ததாக தளர்த்திவிடுதலும், தன் புருவங்களை ஏமிட்டுப்பார்ப்பதும், தன் கணவனைகண்டவிடத்து நடுங்கி, ஓரை கண்ணால் பார்ப்பதுமாம்.

(b) அவையன்றி சப்தமுண்டாக உமிழ்தலும், உறக்கச்சிறிப்பதும், சயனத்தில் தாங்கள் முதலில் படுப்பதும், நட்டம்ஒடிப்பதும் கோட்டுவாய்விடுவதும், சுவல்பகுற்றங்களை மன்னிக்கும்படி கெஞ்சிக்கேட்பதும், குழந்தையைத்தூவி எடுத்து முத்தங்கொடுப்பதும், தன் கணவன் அப்புறம் திரும்பி இருக்கையில் அவனைப்பார்ப்பதும், காதைச்சொரிதலும், அவன் வீட்டில் இல்லாதபோது அவனைப் புகழ்ந்து பேசுதலும் இவை முதலியனவாம்.

21. கணவனிடத்தில் அன்பில்லாத ஓர்மனைவி தன் புருவங்களை நெரிப்பாள் முகத்தை திருப்பிக்கொள்வள், அவனிடத்து நன்றியறிதலின்றி இருப்பாள், தன் கணவன் வரக்கண்டால் உட்கார்ந்தவிடத்தைவிட்டு அப்புறம் போகாள், எப்போதும் சந்தோஷிக்காள், மௌனமுற்றிருப்பாள், தன் கணவனுடைய சத்துருக்களுடன் சிநேகிப்பாள், தன் கணவன் கோபமாகயிருந்தால் அதைத்தணியாள், கடுஞ்சினமாய் பேசுவாள்.

22. அவையன்றி இன்னும் அவள் தன் கணவனைக்கண்டபோதும், அவளை அவன் தொடும்போதும், பயமுற்றவள்போல் நடுக்கமுறுவள், அவனிடத்தில் இன்

பத்தை அனுபவித்தவுடன் தன் முகத்தைத் துடைத்துக்கொள்வள், தன் கணவனுக்குமுன் தான் உறங்கி அவன் எழுந்தபின் எழுவாள்.

23. விகாரமான கண்களை உடையவளும், அழுக்கடைந்தவளும், சண்டைபிடிக்கிறவளுமான ஸ்திரீயை ராக்ஷசியென்றே அறியவேண்டும்.

24. துர்ப்பாஷை பேசுகிறவளும், விகாரவர்ணமான ஆடையை உடுக்கிறவளும், புழுதி அடைந்த தேகதோஷம் கூடினவளுமான ஸ்திரீயானவள் நற்குணமுள்ள ஸ்திரீ ஆகாள்.

25. துன்மார்க்கியையும், ஆரோக்கியமில்லாதவளையும், நீக்கிவிடவேண்டியது, கருப்பு, பச்சை, மஞ்சள், செம்பு இவைகளின் வர்ணத்தை ஒத்த ரக்தத்தை உடைய ஸ்திரீயேயும் அப்படியே நீக்கிவிடவேண்டியது.

26. அதிகமாக தூங்குகிறவளும், மாதவிடாய் காலத்தில் இரக்தம் அதிகமாய் விழப்பெற்றவளும், அதிக பித்தம், சிலேத்துமம், வாயுவு, இக்குற்றங்களை உடையவளும், பழுதான அங்கங்களை உடையவளுமான ஸ்திரீயைப்புணரலாகாது.

27. சதையுள்ள கண்டச்சதையைஉடையவளும், அதிகமாக பேசுகிறவளும், துஷ்ட நடத்தைகளை உடையவளுமான ஸ்திரீகளும் அப்படியே நீக்கத்தக்கவர்கள்.

28. முயலின் இரக்தம், செம்பருத்தியின் ரசம் இவைகளின் வர்ணத்தை உடையதும், நன்றாய் தேய்த்தால் மறைந்துபோகிறதுமான இரக்தம் குற்றமற்றது.

29. மாதவிடாய் காலத்தில் செல்கின்ற ரக்தம் வருத்தமும், சந்தடியும் இல்லாமல், மூன்று நாளைக்குப்பிறகு நிற்குமாயின், அடுத்த நாட்களில் புணர்ந்தால் கர்ப்பம் தரிக்கும்.

30. மாதவிடாய்ஆன முதல் நாளைக்கு ஒரு ஸ்திரீயானவள் ஸ்நானம் செய்யவும், புஷ்பங்கள் முடிக்கவும் சந்தனம் பூசவும் கூடாது, நான்காம்நாள் ஸ்மிருதியில் சொல்லியவண்ணம் ஸ்நானம் செய்யவேண்டும்.

31. பிண்டமானது வலப்புறத்தில் தோற்றினால் ஆண்குழந்தையும், இடதுபுறத்தில் தோற்றினால் பெண்குழந்தையும், இருபக்கமும் தோற்றினால் இரண்டு பிள்ளையும், அடிவயற்றின் நடுவில் தோற்றினால், அலியான பிள்ளையும் உண்டாகும்.

31. ஸ்திரீயானவள் துஷ்ட சீலமுடையவளாயிருக்கில், அழகிய லட்சணங்களைப்பெற்றிருக்கினும், அவள் விபரீத லக்ஷணங்களையுடையார்களில் சிரோமணியாகிறாள்.

32. ஒருவனுக்கு ஆண்குழந்தை வேண்டுமானால் ஸ்திரீயோடு சம்போக காலத்தில் இந்திரியம் பாய்ந்தவுடனே ஸ்திரீயானவள் உடனே வலதுபக்கம் சாய்ந்துபடுத்துவிடவேண்டியது, ஸ்திரீபிரஜை வேண்டுமானால் அப்படியே இடதுபக்கமாய் சாய்ந்து படுக்கவேண்டியது, இரட்டைப்பிள்ளை வேண்டுமென்று விரும்பினால் அசையாமல் மலர்ந்து கிடக்கவும் செய்யவேண்டியது. இது ஒரு சித்தபுருஷனால் எனக்கு வெளியிட்டதை என் அனுபோகத்துக்கும் ஒத்திருந்தபடியால் இந்த ரகசியத்தை இவிடம் வெளியிடலானேன்.

பொதுவிதிகள் முற்றிற்று.

---

## ஏழாவது அத்தியாயம்.

### விவாஹத்துக்குறிய கற்புடைய ஸ்திரீகளுக்கு நிலைத்திருக்கவேண்டிய நற்குணங்கள்.

1. பெருமை நிரம்பிய தனது கணவனானவன் புசித்தபின்புதான் புசித்தல் வேண்டும். 2. அக்கணவன் நித்திரை செய்தபின்புதான் நித்திரை செய்தல்வேண்டும். 3. அவன் துயிலெழுவதன் முன் தானெழுதல்வேண்டும். 4. தனது அருமையான கேள்வனானவன் அருகிலிருக்கும்பொழுது தான் பலவகைப்பட்ட ஆபரணங்களை அணிந்துகொள்ளவேண்டும். 5. அவன் தூரத்தே சென்றபின் அவ்வாபரணங்களைக் கழற்றிவைக்கவேண்டும். 6. நிரம்பப்பெற்ற அன்பினையுடைய கணவனானவன் கோபித்தாலும், துன்பஞ்செய்தாலும், அவனுக்கு மாறுபட்டு எதிராகநின்று கற்புடைய மங்கையர்கள் பேசார்கள். இன்பத்தை பொருந்தினவர்களாகவேயிருப்பார்கள், 7. தாம் வசிக்கும் வீட்டைவிட்டு வெளியில் போகார்கள், அப்படி வீட்டினைவிட்டுப்போகுமவர்களையும் பாரார். 8. திருவிளாக்களைப்போய் பார்த்தல், பெரியோர்களை வணங்கல், நோன்பு முதலியவைகளைக்கிரமமாகச்செய்தல்; குளிர்ச்சிபொருந்திய தெய்வ நதிகள், குளங்கள் முதலியவற்றில் புண்ணியத்திற்காக முழுகுதல் முதலிய காரியங்களைத் தங்கடங்கள் கணவனுடைய உத்திரவின்படி கற்பினையுடைய மாதர்கள் செய்வார்கள். 9. தங்களுடைய ஆபரணங்களைத் தமக்கு மாற்றாளாகிய மாதுக்குக்கணவனானவன் கொடுத்தால் மிகவும் சந்தோஷித்திருப்பார்கள். 10. உத்தம மாதர்கள் வயது மூத்தவர்கள் இல்லாத வீட்டினிடத்தில் வாசஞ்செய்யார்கள்.

11. தமது கணவனது ஆயுள் குறைந்துபோகுமென்று அவனுடைய பெயரை எடுத்துத்தாம் சொல்லமாட்டார்கள். 12. அக்கணவனுணவன் உண்ட மிகுதியைத்தேவர்கள் உண்ணும் அமிர்தமென்று நினைத்துச் சந்தோஷத்துடன் உண்பார்கள். 13. கிராமமாக அக்கணவன் ஊரிலிருக்கப்பிறகு தாம்போய் வேறொரிடத்தில் ஒதுங்கியிருப்பார்கள். 14. இரவிலாவது அல்லது பகற்காலத்திலாவது அன்புடையவராகிய தன கணவர் எதையாவது கேட்டால் அந்தவஸ்து இல்லையென்று சொல்லார்கள். 15. எக்காலத்தும் வீண்வார்த்தைகளைப் பேசமாட்டார்கள். 16. எப்போதாவது பேசவேண்டிவந்து பேசினல் மெய்ம்மொழி அல்லது பொய்பேசார்கள். 17. பிச்சை புகுவோர்களுக்கும், யாவற்றையும் முற்றத்துறந்த சந்நியாசிகளுக்கும், தெய்வங்களுக்கும், சமது குடும்பத்தில் இறந்துபட்டோர்களாகிய மூதாதைகளுக்கும், தாங்களிடும் பணிகளைச்செய்யும் பணியாட்களுக்கும், தம்மில்லததினை நோக்கி விருந்தாக வருவோர்களுக்கும், தங்கடகைகள் கணவனுடைய உத்திரவின்படி கேட்டதைக்கொடுப்பார்சள். 18. தங்கணவன் யாதெனுமொன்றை கேட்குமுன்னர் குறிப்பினையறிந்து அதைக்கொடுப்பார்கள். 19. தமக்குரித்தான கணவனைப் பழிப்பாகப் பேசுவோரிடம் யாதொரு காரியத்தையும் முன்னிட்டுப் போகார்கள். 20. இல்லறத்திற்கு வேண்டியவைகளான வஸ்துக்களையெல்லாம் புருடன முயன்று சேகரித்தபொருட்களை தன மனைவி கையிற்கொடுக்க அருமையாகச்சேகரித்த அப்பொருட்களை வீண்செலவுசெய்யமாட்டாள் 21. தமது அருமையான கணவனுக்கு அவர் ஆயுள்விருத்தியாதம் வண்ணம், பரிசுத்தமான மஞ்சட்பூச்சைத் தமதுதேகத்தில் அணிந்துகொள்வார்கள். 22. தமது கணவன் அழகில்லாதவனுனும், நீராரோயுள்ளோனுனும், அவனை அவமதிக்சாது அவனுடன் அன்புடன்கலந்தின் புறுவர். 23. பிறரொருவரோடு பேசும்போது தங்கள் கைகளைநீட்டி நீட்டிப்பேசார்கள். 24. தமது குரவர் யாதாமொன்றைக் கொடுக்கும்போது அவ்வஸ்துக்களை ஒருகையில் ஏற்காது இரண்டுகைகளாலும் வாங்கிக்கொள்வார்கள். 25. தெருவினின்ருகிலும், சபையினிடத்தினின்ருகிலும் செய்யவேண்டியவைகளைச்செய்யார்கள். 26. தமக்கு முன்னிறந்துபட்டார்களது தேகத்தை உயிரோடு இருப்பவர்களது தேகத்திற்கு ஒப்புச்சொல்லார்கள். 27. தமது தேகத்தினிடமமர்ந்திருக்கும் தூசுகளை மற்றொருவர் தேகத்தில்ப்படும்படி துடைத்துத்தள்ளிக்கொண்டு போகமாட்டார்கள். 28. மேலிட்டுச்சென்று மற்றொருவனைக்கோபித்துப் பேசிடார்கள். 29. 'தாம் உடுத்திக்கொண்டிருக்

கும் ஆடையை கீழிட்டு வெற்றுத்தரையின் மீது படுத்து உறங்கிடார்கள். 30. தாம் படுத்திருக்கும் கட்டிலின்மீதேறி தம் பாதங்கள் பொருந்தும்படி நிற்கமாட்டார்கள். 31. தாம் முடித்த மலர்களை மோந்து வாசனைப் பரீக்ஷை செய்யார்கள். 32. தம்மால் முகரப்பட்ட புஷ்பங்களைத் தமது கூந்தலில் முடித்துக்கொள்ள மாட்டார்கள். 33. அடுத்தடுத்து தினந்தோறும் வாசனையோடுகூடிய பூச்சாந்துகளை அணிந்துகொள்ளமாட்டார்கள். 34. அரிது சேர்த்துவைத்த திரவியத்தை இழந்துபோனால் அதனால் மனத்தில் வாட்டத்தை வையார்கள். 35. தமது கைக்கெட்டாதவைகளை எந்த நாளினும் விரும்பிடார்கள். 37. விசேஷமான சம்பத்து தங்களுக்கு கிட்டவில்லையென்று மனதினிடமாக வருத்தத்தையடையார்கள். 38. உள்ளமானது மகிழ்ச்சியையடையத்தகுந்த சருமங்களெல்லாவற்றையும் வேதங்களை யோதித்தெளிந்த அந்தணர்களது சொல்லின்படி செய்வார்கள். 39. தாம் தமது கண்களினாற்கண்ட தீய விஷயங்களைப்பிறரிடம் வெளியிடார்கள். 40. காதினாற்றும் கேட்ட தீய விஷயங்களைக் னவிலும் பிறருக்குச் சொல்லமாட்டார்கள். 41. தாம் புசித்த உணவினைப்பழித்தல் செய்யார். 42. தாம் பிறருக்குச்செய்த உபகாரத்தையும், தருமத்தையும், நோன்பையும் மனதினிடமாகக்கொண்டு சந்தோஷியார்கள் 43. தம் கணவனன்றி மற்ற யாவரிடத்தும் ஆசாரியனிடத்து தாம்கேட்ட மந்திரார்த்தங்களை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். 44. தங்கள் கணவர்களை நீர் உண்ட உணவிற்குக்கறிகளென்னவென்று வினவார்கள். அதன்றி மற்ற யாரையும் உண்டவுணவும் அதற்கான கறிவகைகளுமென்னவென்னார்கள். 45. தம்மினு முயர்ந்தவர்கள் வருவார்களானால் அவர்களை எதிர்சென்று போய் நின்று அழைக்கமாட்டார்கள். 46. எவரையும் அவரவர்களுக்கு இட்டுள்ள பெயரை வைத்து அழைக்கமாட்டார்கள். 47. மேன்மையோடுகூடிய கற்புள்ள மாதர்கள் பெருமை மிகுந்த கணவர்களது தேகநிழலைத்தாம் மிதித்துக்கொண்டு நிற்கமாட்டார்கள். 48. கணவன் பக்கலினூராவிக்கொண்டு போகார் அப்படிக்கு நடுவிலிருக்க நேர்ந்தால் அக்கணவனைப் பிரதக்ஷணஞ்செய்து வணங்கிச்செல்வாள். 49. தகுதியான நல்வார்த்தைகளைப் பேசிக்கணவன் பேசும்போது அதைத்தடுத்து நடுவில்ப்பேசாள், மேலும் அக்கணவனது எதிர்நின்று உரத்துப்பேசாள். 50. தாம் அதிக அழகினைப்பெற்ற மாதர்களென்று அறிவில்லாது சொல்வோருடன் ஒரு நாளும் பழகமாட்டாள். 51. தங்கடங்கள் தேகத்தை அடிக்கடி உற்றுப்பார்க்கமாட்டாள். 52. ஒருவரையும் பழிப்பான வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். 53. விரும்பப்படுகின்ற தங்கள் கணவனைவிட்டு வேறு புருடர்களைப் பார்க்கமாட்டாள். 54. தங்கள் தலை மயிரைக் கையினாற் அடிக்கடிக்குக் கோதமாட்டாள். 55. தாமொருவரே உண்ணவேண்டுமென்று அடுப்பில் உலையை வைக்கமாட்டாள். 56. பிறருக்கு

ஒருகையினால் யாருக்கும் உண்ணும்படிக்கு நீரினை கொடுக்கமாட்டாள். 57. பிரகாசம்பொருந்திய விளக்கினை அவிக்கமாட்டாள். 58. தங்கள் வாயினால் அடுப்பிலிருக்கப்பட்ட நெருப்பை யூதாள். 59. ஒருயிரைக்கொலைசெய்து அந்த மாமிசத்தை உண்ணமாட்டாள். 60. நீட்சியையடைந்துள்ள தங்கள் தலை மயிரினைக்குலைந்துபோகும்படி வீசமாட்டாள். 61. தமது ஆடையை பல பேர் நடுவிலிருந்து ஒதறமாட்டாள். 62. கற்புள்ள மாதர்கள் வேறொருவர் தமது இல்லத்தை விளக்குங்காலத்தில் நடுவிலே போகமாட்டாள். 63. தமதிரண்டுகைகளாலும் தண்ணீரை யள்ளியுண்ணமாட்டாள். 64. இரண்டு கைகளாலே தம்முடைய தேகத்தைத்தொட்டுச் சொறியமாட்டாள். 65. மாலைக்காலத்திலும் காலை வேளைகளிலும் படுத்திருக்கமாட்டாள். 66. கற்புடைய மாதர்களது இயல்பாவது தமது கணவன் இறந்தால் தாமுமுடனே இறத்தல், அவன் வாழ்ந்தால் தாமும் உயிர்வாழ்ந்திருத்தல், அவன் துன்பத்தை யடையுங்காலத்தில் தாமும் அத்துன்பத்தை அனுபவித்தல், தம்முடைய கணவன் காலலம்பும் நீரை கங்கையெனவும், கணவனைத்தெய்வமாகவும் எண்ணுவாள். 67. அழகினையும் மடப்பத்தையுமுடைய மாதர்கள் பூப்பினையடைந்த மூன்று தினங்களிலும் தங்களுடைய முகத்தினைத்தங்கள் கணவனுக்கு காட்டாள், அக்காலத்தில் உரைத்தும் பேசாள். 68. நான் காந்தினம் நல்ல நீரினிடத்து முழுகிவந்து தங்கள் கணவனுடைய முகத்தைப்பார்ப்பாள். 69. அந்த தினத்தில் கணவனில்லாவிட்டால் அவனை மனதினிடமாக தியானித்து சூரியனைப்பார்ப்பாள். 70. குற்றமற்ற கற்பினால் மிகுந்த அழகினையடைந்துள்ள மாதர்கள், தங்களுடைய கணவன் தங்களையழைத்த காலத்தில் அதிசீக்கிரமாக அவனுக்கெதிரில் வருவாள். 71. தாய் தந்தையாரைக்காட்டிலும் தாங்களரிதிற் பெற்றெடுத்த குழந்தைகளைப்பார்க்கிலும் குற்றமற்ற கணவன்மீது நிரம்பிய அன்பினையுடையவளாவாள். 72. கற்பில் மேம்பட்ட, உடுக்கையைப்போன்ற இடுப்பினையுடைய மாதர்கள் உயர்ச்சியையுடைய உலக்கையின்மீதும், உரலின்மீதும், அம்மியின்மீதும், முறத்திலும், வாசலிலுள்ள படியின்மீதும் பெருமைபொருந்திய இலக்குமி நீங்கிவிடுவளென்று உட்காரமாட்டாள். 73. பெருமையுடன் சூரியனானவன் உதிக்கும்படியான பகற்காலத்தில் படுக்கையின்மீது படுத்து உறங்கமாட்டாள். 74. இன்பத்தைச் செய்யும்படியான கணவனுடைய உத்தரவில்லாமல் விரதங்களையும் தெய்வ பூசையையும் விருப்பமாகச்செய்தால் அம்மாதர்கள் நரகத்தில் அழுந்துவார்கள். 75. தன் கணவன்மீது பழியைச் சுமத்துபவர்களும், சொல்வோர்களும், அக்கணவனுடன் எதிர்த்துக் கோபித்துச் சொல்வோர்களும், கொடுமை மிக்க நரியாயும், நாயாயும் மறுபிறப்பிற் பிறப்பார்கள். 76. பொருந்திய தமது கணவன் சீறிக் கோபித்தால் அவன் முன்பாகவந்து அவனை வைதவர்கள் மிகுந்த வலி

மையையுடைய புலியாகப்பிறப்பர். 77. சக்கிழத்தியைக் கண்டால் அவளருகிற் சென்று கோபிப்பவர்கள் கோட்டானாகப் பிறப்பாள். 78. தமது கணவன் பசித்திருக்கும்போது உண்பவர்கள் பன்றியாய்ப் பிறப்பர். 79. அறிவில்லாமல் அயல் புருஷனுடைய அழகினைக்கண்டு சந்தோஷிப்பவள் மறுபிறப்படைந்தாளானால் பேயாய்ப் பிறந்து அலைவாள். 80. தமது கணவனை நிந்தித்து தாய்வீட்டிற் போயிருப்பவளை யமனுடைய தூதர்கள் கோபத்தோடு கட்டிப்பிடித்து மிகவுமெரிகின்ற நரகத்தினிடைச்சேர்ப்பார்கள். 81. தமக்கு உருமையான கணவன் இறந்தால் அவனுடனே நெருப்பில் விழுந்து சாகமனஞ்செய்தற்கு வழி நடக்கும் மாது வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் ஒரு அசுவமேதயாகஞ்செய்த பலன் கிடைக்கும். 82. குற்றமற்ற தங்கள் கணவனுடன் புண்ணிய வுலகமாகிய கற்புடைய லோகம் புகுவாள். 83. தங்களுடைய கணவனானவன் மகா பாவியானாலும் அக்கணவனுடன் சிகைகள் நிறைந்த நெருப்பில் வீழ்ந்தவள் கற்புடையவளே யென்றால், அப்படிவருபவளை யமன்காணுவானானால் மன இனிடத்தில் அச்சத்தையடைந்து தனது தூதர்கள் தன்னைப் புடைசூழ்ந்துவர அவளையும் அவள் கணவனையும் விட்டுப்போய் விடுவான். 84. தன்னுடைய கணவனோடு சென்று எரியில் மூழ்கும்படியான கற்புடைய மாதர்களது தேகத்திலுள்ள ஒவ்வொரு மயிருக்கு ஆயிரங்கோடி காலவளவுக்கு தனது கணவனுடனே சானுப்பொருந்திய விசேடப்பிரகாசம் வீசும்படியான சுவர்க்கத்தில் இனிமையாக வாழ்வாள். 85. மேன்மைபொருந்திய கற்பில் மிகுந்த மாதரைக் கண்டால் சூரியனும், வெண்மையான சந்திரனும், பரிசுத்தம்பொருந்திய அக்கினியும் தங்கடங்கள் பிரகாசம் குன்றிப்போவார்கள். 86. அவ்வகைப்பட்ட மாதினுடைய தாய்தந்தையரும் அவளை மணம் புரிந்த கணவனும் மற்றும் இருபத்தொரு தலைமுறையிலுள்ள சுற்றத்தார்களும் அழிவில்லாத சுவர்க்கம்பெறுவார்கள். 87. பரிசுத்தம்பொருந்திய கற்புள்ள மாதர்களது பிரகாசம் பொருந்திய அடிச்சுவடுகள் படிந்த எல்லாவிடங்களும் மேன்மை நிறைந்த புண்ணியத்தலங்களினும் மேம்பட்டதாகும். 88. பூலோகத்தில் நிரம்பியிருக்கப்பட்ட புண்ணிய நதிகள் யாவும் தங்கடங்கள் பாவங்கள் நீங்கும்பொருட்டுக் கற்புடைய மாதர்கள் தத்தமிடம் வந்து முழுகும்படிப் பிரார்த்திக்கின்றன. 89. பெருமை மிகுந்த கற்பில்லாத மாதர்களைப்பெற்ற தாய் தந்தையர்கள் அவர்கள் குடியிலுளளோர்கள் கணவன் மரபினிலுள்ளோர்கள் ஆகிய இவர்களெல்லாம் துன்பத்தையடைந்து ஏக்கமுறும்படி யமதூதர்கள நெருப்பினைக்கக்கும் நரகத்தினிடத்தில் தினந்தோறும் வீழ்த்துவார்கள். 90. மிகுந்த செல்வம் நிரம்பிய மாடங்களும் கோபுரங்களும் நிறைந்த வீடாயினும் கற்புடைய மாதர்களில்லாத வீடானது பேய்கள் நிரம்பப்பெற்ற காட்டிற்கு சமானமாகுமென அப் பெரியோர்கள் சொல்லுவார்கள். 91. வெள்ளியசந்திரனும், சிவந்த கிரணமு

களுடைய அக்கினியும், வாயுவும் செப்பமாகிய கற்பினையுடையமாதர்களது தேகத்தைத்தொட்டால் தங்கடங்கள் மனதில் பயத்தினையடைவார்கள். 92. கணவனிறக்கத் தாம் மேலணிந்திருக்கும் ஆபரணங்களை யிழந்த மாதர்கள் உயிரானது நீங்கியதேகத்தைப்போலவே நினைத்து யாவரும் தீண்டமாட்டார்கள். 93. தெருவில் போகும் வழியிலவர்களைக்கண்டால் போகுங்காரியத்திற்குத்தடையுண்டாயிற்றென்று தத்தமிடத்திற்குத் திரும்பிவிடுவார்கள். 94. அம்மாதர்களது ஓர் சொல்லும் கொடுமையான விஷமென்று சொல்லுவார்கள். 95. சற்புடைய கைம்பெண்கள் தமக்குப்பொருந்தி யிருக்கப்பட்ட ஒழுக்கத்தை விட்டு நீங்கில் தங்கடங்கள் அருமையான சுற்றத்தாரோடு நரகத்தில் தள்ளப்படுவார்கள். 96 அவ்வகையகைம்பெண்களை தமது மயிர்த்தலையை மொட்டையடிக்காவிட்டால் யமனுடைய தூதர்கள் அக்கைம்பெண்களுடைய கணவர்களது தோள்களில் கயிற்றைப்போட்டிழுப்பார்கள். 97. மிகுந்த தயவினையுடைய கணவனிறக்கில் அக்கைப்பெண்கள் பகலில் ஒருபோதுண்டு, வெற்றிலை பாக்கையும், படுக்கும் பாயையும் நீக்கிவிட்டு வீட்டினிடத்தில மண்ணின்மேல் நித்திரைசெய்வார்கள். 98. கடினமான விரதங்களைச்செய்து, தன் கணவன் ஆசாரியன் முதலிய பெரியோர்களுபதேசித்தபடி ஸ்ரீய:பதியுடைய கைங்கரியத்திலீடுபட்டு அந்தபரமாத்துமாவினுடைய தாமரைப் போன்ற பாதங்களை வணங்கி நிற்பாராம். 99. இவ்வகையான விதவைகள் பற்பல விரதங்களைச்செய்தால் எம்பெருமானுடைய அருளைப்பெற்று நல்ல கதியினையடைவார்களென்றறிக.

கற்புடைய ஸ்திரிகளுக்கு நிலைத்திருக்கவேண்டிய
நற்குணங்கள் முற்றிற்று.

---

எட்டாவது அத்தியாயம்.

## விவாஹத்துக்குத்தகாத நிலைத்திராநின்ற
## கற்பில்லாத ஸ்திரீகளுக்குரிய தீயக்குணங்கள்.

1. பிதாவற்றவர்களும், தாயற்றவர்களும், தம்முடைய தமையன்மாரில்லாதவர்களும், தங்கையரில்லாதவர்களும், காவலாயுள்ள ஆண்மக்களுடன் பிறவாதவர்களும், அத்தகைய ஆண்மக்களிறக்கப்பெற்றவர்களும், பெருஞ்சுற்றமில்லாதவர்களும், யாவரும் வியக்கத்தக்க செல்வமற்றவர்களும், உயர்குடிப்பிறவாதவர்களும், நோயுள்ள மாதாபிதாக்களிடத்திற் பிறந்தவர்களும், தீயொழுக்கமுள்ள மதங்களிற் பிறந்தவர்களும், நோயாளிகளும், ஊமைகளும், முடவர்களும், செவிடர்களும்,

அயலார் வீட்டிற்கு போகின்றவர்களும், நாசிகளைப்போற் பார்ப்பவர்களும், பலகாலமும் யௌவனமுடைய ஆடவர்களைப்பார்த்துக்கொண்டு மிகவும் ஆவலுள்ளவர்களாய் வாயிற்படியில் நிற்பவர்களும் அழகுமேம்படும்படி அலங்கரித்துக்கொள்பவர்களும், மீதூண்விரும்புவோர்களும், நெடுந்துயில்கொள்ளும் சுபாவமுள்ளவர்களும், தம்மினும் மேம்பட்ட வயதுடையவர்களும், விவாஹத்துக்கு ஆகாராம்.

2. ஒற்றுமைப்பட்ட கோத்திரத்திலும் மரபினுமுள்ளவர்களும்நெட்டையாயிருப்பவர்களும் குட்டையாயிருப்பவர்களும் தாலித்த சரீரமுடையவர்களும், சுட் இத்த சரீரமுடையவர்களும், யாதொருபிரயோசனமுமற்ற கருநிறங்கொண்டசரீரமுடையவர்களும், பொன்போன்று அழகுமிக்க சரீரமுடையவர்களும், பெருமைதங்கிய தேமல் படர்ந்துள்ள சரீரமுடையவர்களும், வெளுத்த சரீரமுடையவர்களும், உதிரத்தைப்போன்ற நிறத்தில் மேம்பட்டவர்களும், வெட்கமற்றவர்களும், ஆடவர்கள் கலவியில் அதிவிருப்பமுள்ளவர்களும், சதா சிரிப்பவர்களும் அதிக பல வீனர்களும், விசேட வலியில் மேம்பட்டவர்களும், மாதா பிதாக்களின் ஆக்கினையைக்கடந்தவர்களும், மிக்க கோபமுள்ளவர்களும், விசேட பகைமையுள்ளவர்களும், போர் புரியுந்தன்மையில் முயற்சிப்பவர்களும், சூத்து முதலியவற்றைப்பார்க்க விருப்பமுள்ளவர்களும், மன்மதனால் வருந்துவோர்களும், எம்பெருமானிடத்தில் அன்பில்லாதவர்களும், பெருந்தன்மையைவாய்ந்த பெரியோர் முனிவர் பாகவதர்களை நிந்திப்பவரும், சீவர்களிடத்தில் அன்பென்பவை யில்லாதவர்களும், தங்கள் குலாசாரத்திலொழுகாதவர்களும், குற்றமுள்ள குணமுடையவர்களும், கற்பற்றவர்களும், மனமென்னும் காவலில்லாதவர்களும், ஆசாரியரை மனிதனென்று நினைத்தவர்களும், தெய்வமூர்த்தங்களைக் கல்லென்றுரைத்தவர்களும், பத்துக்கு மேற்பட்ட வயதுள்ளவர்களும், பூப்புநிகழும் பருவமடைந்தவர்களும், கணவன் குணத்திற்கேற்ற குணமில்லாதவர்களும், அச்சமற்ற மனமுடையவர்களும், இடியேற்றைப்போன்ற குரலுடன் வசனிப்போர்களும், மாதாபிதாக்கள் மணமுடித்துக்கொடுப்பதற்குமுன்பே ஒருவரிடத்திற் காதல்வைத்து அவரையணையும்படி மனம்வைத்தவர்களும், செருக்குற்றவர்களும், மடம்பயிர்ப்பு என்னும் குணங்களில்லாதவர்களும், பிறவிக் குருடர்களாயுள்ளவர்களும், பிறந்தபின்பு பார்வை யிழந்தவர்களும், பூப்பட்ட கண்களுடையவர்களும், படலம் படர்ந்துள்ள பார்வையையுடையவர்களும், குறிப்பாக மெதுவாய் விரும்பிப்பார்க்குங் குருடர்களும், குருடப்பார்வையுடையவர்களும், சிறப்பற்ற பூனைக்கண்ணுடையவர்களும், கூண கோரத்திற்கோர் கால்சுழன்றுகொண்டிருக்கும் சிவந்த கண்களையடைந்தவர்களும், அடர்ந்துள்ள கூந்தலுடையவர்களும், நரைமுதிர்ந்த கூந்தலுடையவர்களும், மாசுபடிந்துள்ள கூந்தலுடையவர்களும், விரிந்துள்ள கூந்தலுடையவர்களும், அளவற்ற செம்பட்ட மயிர்களுள்ள கூந்தலுடையவர்களும், பூமியிற்படியும் நீட்சியுள்ள கூந்தலுடையவர்களும், பழுதுற்ற கூந்தலுடையவர்களும், மிருகத்தைப்போ

ன்ற உரத்த குரலுள்ளவர்களும், சிறுத்த கண்களையுடையவர்களும், விசேடமாக நீண்டிருக்கும் மூக்குள்ளவர்களும், இரண்டு புருவங்களும் ஒன்றுசேர்ந்துள்ளவர்களும், குறுகிய காதுடையவர்களும், நீண்ட பற்களுடையவர்களும், வளைந்த கழுத்துள்ளவர்களும், மருவற்றிருக்கும் முகமுடையவர்களும், அழகிய தேமல்படராத் தனங்களுள்ள மார்புடையவர்களும், சிறுமையுற்ற இடையில்லாதவர்களும், வில்லென்றுசொல்லும்படி மிகப்பருத்த வயிறுள்ளவர்களும், சாமுத்திரிகநூலில் முறைமைப்படி கூறியுள்ள இலக்கணங்களில்லாதவர்களும், உள்ளங்கையும், நகங்களும், காலடிப்புறமும், அழகமைந்த சிவந்த நிறமில்லாதவர்களும், சிலமயிர்கள் பொருந்திய அகன்ற பாதமுடையவர்களும், மிருதுவான சிறகுகளைப்படைத்த அன்னப்பறவையைப்போன்று சிறந்த நல்ல நடையற்றவர்களும், கால்விரல்கள் பூமியிற்படாதவர்களும் விவாஹத்துக்கு ஆகாராம்.

3. மேற்சொல்லிவந்த தோஷகுணங்கள் நீங்கியவளும், நற்குணங்கள் நிறைந்துள்ளவளும் ஆகிய, மேற்காட்டப்பட்ட கற்பிலக்கணங்கள் நிரம்பப்பெற்ற கன்னிகையைத்தேடி விவாஹஞ்செய்வது அதிக உத்தமமென்று அறியவேண்டியது.

விவாஹத்துக்குத் தகாத கற்பில்லாத ஸ்திரீகளுக்குரிய
தீயகுணங்கள் முற்றிற்று.

---

## ஒன்பதாவது அத்தியாயம்.

### பெருமை பொருந்திய நூல்களெடுத்துச்சொல்லும் பலவகைப்பட்ட இலக்கணங்களில் மங்கைகட்கு அறியவேண்டிய முக்கியமான சில சாமுத்திரிகாலக்கணங்கள்.

---

1. ஸ்திரீகளுக்கு அமைந்த இலக்கணங்கள் பலவாயினும் அவற்றுள் சிறந்தவை முப்பத்திரண்டாம், அவையாவன:—

2. ஐந்து இடம் நீண்டும், ஐந்து மிருதுவாயும், ஆறு உயர்ந்தும், ஏழு சிவந்தும், மூன்று விசாலமாயும், மூன்று குறுகியும், மூன்று தாழ்ந்துமிருக்கவேண்டும்.

(a) நீண்டு இருக்கவேண்டிய ஐந்து இடங்களாவன:— கண், காது, கை, முழங்கால், மூக்கு இவைகளாம்.

(b) மிருதுவாய் இருக்கவேண்டிய ஐந்து இடங்களாவன:— மயிர், விரல், நகம், தோல், பல் இவைகளாம்.

(c) உயர்ந்து இருக்கவேண்டிய ஆறு இடங்களாவன:— நெற்றி, தோள் வயிறு, அக்குள், மார்பு, புறங்கை இவைகளாம்.

(d) சிவந்திருக்கவேண்டிய ஏழிடங்களாவன:— கடைக்கண், உள்ளங்கை, உள்ளங்கால், உண்ணாக்கு, உதடு, வாய், நாக்கு இவைகளாம்.

(e) விசாலமாய் இருக்கவேண்டிய மூன்றிடங்களாவன:— இடை, மார்பு, நெற்றி இவைகளாம்.

(f) குறுகி இருக்கவேண்டிய மூன்றிடங்களாவன:— கழுத்து, முழங்காலின்கீழ், அல்குல் இவைகளாம்.

(g) தாழ்ந்திருக்கவேண்டிய மூன்றிடங்களாவன:— நடுமார்பு, நெற்றியின் கீழ்ப்பாதி, உந்தி இவைகளாம்.

3. இந்த இலக்ஷணங்கள் முப்பத்திரண்டையும் குறைவின்றி அமையப்பெற்றவள் இராஜபத்தினியாவாள்.

---

ஸ்திரீ புருஷர்களுக்கு வயசு அளக்கும் விதத்தை இங்கு குறிக்கப்பட்டிருக்கிறது.

(சாதகமில்லாதவர்களுக்கு இக்குறிப்பு போதுமானது.)

---

1. ஓர் கயிற்றால் விரல்களைந்தையும் முறையே அளந்து, அந்த அளவையுடைய கயிற்றை முழங்கையில்வைத்து அளக்கில், அக்கயிறானது நடுவிரல் நுனிவரையில்வந்தால், இராஜபத்தினியாதல், நடுவிரலின் மேல்இரையில் வந்திருந்தால் மந்திரியின் தேவியாதல், நடுவிரலின் நடுஇரையில் வந்துநின்றால், திரவியம். அடிஇரையில் வந்துநின்றால், நன்று. உள்ளங்கை ரேகையில் வந்துநின்றால், வறுமை:— இடதுதோள்தொடுத்து கைநடுவிரல் நுனிமட்டும் வந்தநூலை இரட்டித்து இடதுகாலின் பெருவிரல் நுனியில்வைத்து அளக்கையில் அக்கயிறானது நெற்றிமயிர்வரையில் வந்தால், நூறு வயசு, செல்வம். புருவம்வரையில் வந்தால், எழுபது வயசு, அதிகசெல்வம். மூக்கின்வரையில் வந்திருந்தால், அறுபது வயசு திரவியம். மூக்கின் நுனிவரையில் வந்திருந்தால், ஐம்பத்தைந்து வயசு, சகலரு

க்குத்துன்பம், வாயில் வந்துநின்றால், செல்வம். மேல்வாய்வரையில் வந்தால், நாற்பத்தைந்து வயசு. கழுத்துவரையில்வந்தால், நாற்பது வயசு, முழுவறுமை. மேற்சொன்னவற்றிற்கு கீழ் இருந்தால், அற்பாயிசு.

அளக்கிற நூலுக்கு மஞ்சள், சந்தனம், வாசனைத் திரவியம் முதலியனபூசி கற்பூரதீபம் தூபம் காண்பித்து விநாயகமூர்த்தியை அன்புடன் தியானித்து அளக்க வேண்டியது. வெறுங்கயிற்றால் அளந்தால் ஆயுசு குறையும். (12 வயதுக்கு மேற்பட்ட ஸ்திரீகளுக்கு பார்க்கவேண்டியது.)

---

## புருஷனுக்கு கயறு அளக்கும் விதம்.

---

கால்பெருவிரல்தொடுத்து, நெற்றிவரையில் உள்ள அளவையுடைய கயற்றையும், உடம்பைச்சுற்றி முலைமார்புக்கு சரியானதாகிய கயற்றையும், ஒன்றாய்ச் சேர்த்து, அந்த அளவின் நாலில் ஒரு பங்கையும் அதனோடு சேர்த்து அளந்தவளவில் அந்த அளவானது தன் கையால் நூற்றெட்டு அங்குலமிருந்தால், குபேர சம்பத்து. நூற்றெட்டு அங்குலத்திற்கு அதிகமாயிருந்தால், குறைந்த ஆயுசு. நூற்றெட்டு அங்குலத்திற்கு குறைவாயிருந்தால், வறுமை. வலதுதோள்தொடுத்து நடுவிரல் நுனிவரையில் வந்த நூலை இரட்டித்து காலின் பெருவிரல் நுனியில்வைத்து அளந்துபார்க்கில், அக்கயிறானது நெற்றிமயிர்வரையில் வந்திருந்தால், நூறு வயசு, செல்வம். நெற்றி நடுவில் வந்திருந்தால், தொண்ணூறு வயசு. புருவம்வரையில் வந்திருந்தால், எண்பது வயசு, செல்வம். மூக்கு நடுவரையில் வந்திருந்தால், எழுபது வயசு, இரக்கம், திரவியம். மூக்கு நுனிமட்டும் வந்திருந்தால், சகலருக்கும் நன்மை. வாய் நடுவரைக்கும் வந்திருந்தால், அறுபது வயசு, சொற்ப போகம். மோவாய்கட்டைவரையில் வந்திருந்தால், ஐம்பது வயசு. கழுத்துவரையில் வந்திருந்தால், நாற்பது வடசு. மார்புவரையில் வந்திருந்தால், முப்பது வயசு, வறுமை. மேற்சொன்ன அளவிற்கு குறைவாகில், அற்பாயுசு. வலதுகைவிரல்கள் ஐந்தின் அளவையும் முறையே ஓர் கயிற்றால் அளந்துகொண்டு, அக்கயிற்றை முழங்கையில்வைத்து அளந்துபார்க்கில் அது நடுவிரலின் நடு இறைமட்டும் வந்திருந்தால், அதிசச்செல்வம். நடுவிரலின் மேல்இறைவரையும் வந்திருந்தால், மந்திரிதவம். நடுவிரலின் அடிவரையும் வந்திருக்கில், உத்தமம். உள்ளங்கைவரையும் வந்திருந்தால், வறுமை.

இந்த அளவானது 16 வயதுக்கு மேற்பட்ட புருஷர்கட்கு பார்க்கவேண்டியது.

பின்வருவது ஸ்திரீகளுக்குள்ள லக்ஷணமல்லவாயினும், இதை யாவரும் அறிந்திருக்கவேண்டிய அவசியமாகையால் இவ்விடத்தில் காட்டப்பட்டது.

ஒருவனுடைய விவாஹத்திற்காக ஓர் பெண்ணை முதலில் பார்க்கப்போகும்போது, அப்பெண் எண்ணெய்தேய்த்துக்கொண்டிருந்தால், ரோகம். அழுதுகொண்டிருந்தால், அமங்கலியாதல். தூங்கிக்கொண்டிருந்தால், மரணம். விவகாரத்திலிருந்தால், வீட்டில் இருப்பவர்களை துரத்தல். நிர்வாணமாயிருந்தால், துக்கம். இருட்டிலிருந்தால், அஞ்ஞானம். வெளிச்சத்திலிருந்தால், நற்பேறு. போஜனம் செய்துக்கொண்டிருந்தால், பிள்ளைப்பேறு. மாதவிடாயாய் இருந்தால், மரணம். அப்படியன்றி பிழைத்தால், வியபிசாரியாதல். அலங்காரித்துக்கொண்டிருந்தால், சுபம்.

## பத்தாவது அத்தியாயம்.

### பத்மினி முதலிய ஜாதிகளின் இலக்ஷணத்தையும் அவர்களைப் புணரத்தக்க காலத்தையுஞ் சொல்லுகிறது.

1. பத்மினி ஜாதியென்னும் நாயகியானவள் பரிபூர்ண சந்திர பிம்பத்தை யொத்த முகத்தை யுடையாளும், அசைவற்ற கண்பார்வையுடையாளும், பருத்த ஸ்தனங்களை யுடையாளும், உசலவளும், மெதுவான அவயவங்களை யுடையாளும், அலர்ந்த தாமரை மலரின் மணம் பெற்றவளும், கறுத்து அல்லது சிவந்ததாகிய நிறத்தையுடையாளும், சிற்றுண்டியில் அல்லது ஆகாரத்தில் அற்பமாகிய ருசியை யுடையாளும், காமலீலையில் வல்லவளும், ஹம்ஸத்தின் குரலையொத்த குரலைப் பெற்றவளாகி தானம் செய்கிறவளும், லஞ்ஜையுடையாளும், குரு, தேவதை இவர்களுடைய பூஜையால் மிகுந்த சிரத்தையுடையாளுமாகிருள்.

2. சித்தினி ஜாதிஸ்திரீயானவள் கறுத்த நிறமுடையாளும், தாமரை மலர் போன்ற முகத்தைப்பெற்றவளும், மான் விழியாளும், மழமழப்புடையதாகி அழகிய சரீரத்தையுடையாளும், சங்கீத சாஸ்திரம், சிற்பசாஸ்திரம் இவைகளைக்கற்றுணர்ந்தவளும், உயர்ந்த கொங்கைகளையும், சிறந்த அங்கங்களையுடையாளும், எப்பொழுதும் வித்தியாப்பியாசத்தில் சிரத்தையுடையாளும், நடையினல் தம

த்த யானையையும், தொனியினால் மதத்த மயிலையும், ஒத்திருப்பவளும், விசித்திர மாகிய தொனியைப்பெற்றவளும், சிறந்த மகாகவிகளுக்கு இஷ்டையுமாக அறியத் தக்கவள்.

3, சங்கினி ஜாதி ஸ்திரீ என்பவள் மெல்லிய அவயவங்களையும், கோணிய பார்வையையும், சிறிய ஸ்தனங்களையும், பெரும்பாலும் நீண்ட தலைமயிர்களையும், பொன்னிறத்தையும், கரகரவென்று பேசுகிற குரலையும் உடையாளாகி அதிக மாக அன்னத்தைப்புசிப்பவளும், ஸ்வபாவத்தில் கோட்சொல்லுகிறவளும், காம லீலையில் புருஷனால் வருந்தி அனுபவிக்கத்தக்கவளும், அசைந்து நடப்பவளும் சிவந்த வஸ்திரத்தை பிரீதியுடையவளும், காமலீலையில் பற்பல விடங்களில் நக லீலையைச்செய்ய விருப்பமுடையவளுமாக அறியத்தக்கவளாகிறாள்.

4. ஹஸ்தினி ஜாதிஸ்திரீயானவள் மிகப்பருத்தும் குறுகியுமிருக்கிற அங்கங் களையும், மெதுவாகிய நடையையும், கொடியதாகிய ஸ்வபாவத்தையும், வணங் கிய கழுத்தையும் சற்றுப்பொன்னிறங்களாகிய முன்னெற்றி மயிர்களையும், பரு த்து அகன்ற ஸ்தனங்களையும், வெட்கத்தையடையாத முகத்தையும், கோவைப் பழம்போன்ற உதடுகளையும் உடையாளாகியும், வெகுவாகப்பண்டங்களைப்புசிக்க விருப்பமுடையாளும், சிவந்த நிறத்தை பெற்றவளும், புருஷனால் மிகவருந்தியே புணரத்தக்கவளாகவும், யானையின் மதஜலத்தின் மணத்தைக்குஹயத்தில் பெற்ற வளுமாக நிச்சயிக்கப்படுகிறாள்.

ஷை ஜாதிகளைப் புணரத்தக்க காலங்கள்.

5. பத்மினி ஜாதி ஸ்திரீயின் புணர்ச்சியில் ஒன்று, இரண்டு, நான்கு, ஐந்து, இந்த திதிகள் தக்கவைகள்.

6. சித்தினி ஜாதி ஸ்திரீயானவளை ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு ஆகிய இந்த திதிகளில் புணரில் பிரீதியடைவாள்.

7. சங்கினி ஜாதி ஸ்திரீயானவள் ஏழு, பதினொன்று, பதின் மூன்று, ஆகிய இந்த திதிகளில் புணரில் மிகுந்த திருப்தியைப்பெறுவாள்.

8, ஹஸ்தினி ஜாதி ஸ்திரீயின் புணர்ச்சியில் பெற்றுள்ள மூன்று, ஒன்பது, பதினான்கு, பதினைந்து, ஆகிய இந்த திதிகள் பிரீதியைத் தருவனவாகின்றன.

9. பத்மினி ஜாதி ஸ்திரீயினை புணர்ச்சிக்கு இரவில் நான்காவது யாமமும், சித்தினியினை புணர்ச்சிக்கு இரவில் முதல் யாமமும். சங்கினிக்கு மூன்றாவது யாமமும். ஹஸ்தினிக்கு இரவிலும், பகலிலும், நடுபாகமாகிய இரண்டாவது யாமமும் ஏற்றவைகளாகச்சொல்லப்பட்டன.

10. பத்மினி ஜாதி ஸ்திரீ ஒருத்தி இரவில் தன்னை புணருகிற புருஷனை சுகிக்கச்செய்யாள் (தான் திருப்தியடையாள்.) ஆகையால் அவளை இரவில் புணரலாகாது. காமலீலைகளில் தெளிவுறாத சிறு குழந்தையாகிலும் பகலில் பத்மினியைப் புணர்ந்ததாகில், அவள் இரவியின் சம்பந்தத்தினால் தாமரைக்கயம் மலருவதுபோல் விரைவில் திருப்தியடைகிறாள்.

---

## பதினோராவது அத்தியாயம்.

### மூலதேவரால் சொல்லப்பட்டிருக்கிற ஸ்திரீகளின் சுபாவத்தை சொல்லுகிறது.

1. தேவ ஸ்வாபவத்தையுடைய ஸ்திரீயானவள் இடையில் திரிவல்லி என்னும் மூன்று சதைமடிப்புகளைப்பெற்றும், சங்குபோன்ற கழுத்தையுடையாளும், வல்லவளும், தாமரையலரின் மணம் வீசுகிற சரீரத்தையுடையாளும், தாழம்பூவின் உள்போன்ற அழகிய ரூபத்தைப்பெற்றவளும், சுகியான சரித்திரங்களால் ஆச்சரியத்தைததருகிறவளும், சீலம், சந்தோஷம் இவைகளை விடாதவளும், இனியகுயில்குரலைப்பெற்றவளுமாகிறாள்.

2. கந்தருவ ஸ்வபாவத்தை யுடையஸ்திரியானவள் ஆசையுடன் அசைவுற்றிருக்கும் பார்வையுடையாளும், ஆடல், பாடல்களில் வல்லவளும் நற்சந்தனம், மாலை இவைகளில் அன்புடையவளும், சிசிரருது, வசந்த ருது இந்த மாசங்களில் கிரீடிப்பதில் மிகுந்த ஸ்நேகத்தையுடையாளும், கெட்டியான சரீரத்தையுடையாளுமாகிறாள்.

3. யக்ஷ ஸ்வபாவ ஸ்திரீகள் பருத்துயர்ந்த ஸ்தனங்களையும், சிவந்து மிக உயர்ந்து பருத்த சரீரத்தையும் உடையளாகி, யௌவனப் பருவமுடைய மானினுடைய விழியைப்போன்ற விழியையுடையாளும், வெட்கமற்றவளும், பலவிதத்திலும் மன திற்கினியதான சரீரத்தையுடையாளும், மச்சம் மற்றும் மாம்ஸங்கள் இவைகளை ஆகாரமாக உடையவளுமாகிய இவள்; மிகவும் உத்தமமான யக்ஷ ஸ்வபாவத்தை (இயக்கரின் ஸ்வபாவம்) உடையவளாக முனிவர்களால் சொல்லப்படுகிறது.

4. பிரேத ஸ்வபாவ ஸ்திரீகள் :— காடுகளில் கிரீடிக்கும் வகையறிந்தவளும், இரவில் திரிகிற ஸ்வபாவமுடையாளும், குற்றமுடையதாகி கோட்சொல்லுகிறமனமுடையாளும், நிந்திக்கப்பட்டவைகளான ஆஹாரம், தொழில் இவைகளைப்பெற்றவளும், விகாரமாகிய முகத்தையுடையாளும், கறுத்தநிறத்தைப்பெற்று மிகவும் குள்ளமாகிய சரீரத்தையுடையாளும், அழுக்கடைந்த ஆடையில் ஆசையுற்றவளுமாகிய ஸ்திரீயானவள் பிரேதங்களின் ஸ்வபாவத்தையுடையவளாகச் சொல்லப்படுகிறது.

---

ஸ்திரீ புருஷர்களின் ஜாதி வேறுபாடுகளுக்கீடாகப் புணர்ச்சியின்
பேதத்தைச்சொல்லுகிறது.

---

1. ஆறு, ஒன்பது, பன்னிரண்டு அங்குல அளவு நீளமாகிய லிங்கத்தையுடைய புருஷர்கள், கிரமமாக சசன் (முயல் ஜாதியன்) விருஷபன் (எருது ஜாதியன்) துரகன் (குதிரைஜாதியன்) என்றும். இந்த ஆறு, ஒன்பது, பன்னிரண்டு அங்குல அளவு ஆழ்ந்த அல்குலையுடைய மாதர்களும் கிரமமாக மிருகி (பெண்மான் ஜாதியாள்,) அசுவி (பெண்குதிரை ஜாதியாள்) கரிணீ (பெண்யானை ஜாதியாள்) என்று இவ்விதமாக பண்டிதர்களால் புருஷனுக்கும் ஸ்திரீகளுக்கும் பிரித்துச் சொல்லப்படுகிறார்கள். அதை முழுது முரைக்கில் கிரந்தம் வளருமென்று அஞ்சி இங்கு சுருக்கிக் காட்டியது.

2. ஆறு அங்குல அளவு உடையார்களாகிய சசஜாதிபுருஷன், பெண்மான் ஜாதிஸ்திரீ ஆகிய இவர்களுக்கும், ஒன்பது அங்குல அளவைப்பெற்றவர்களான விருஷபஜாதி புருஷனுக்கும், பெண்குதிரைஜாதி ஸ்திரீக்கும், அப்படியே பன்னிரெண்டு அங்குல அளவையுடையார்களான அசுவஜாதி புருஷனுக்கும், பெண்யானை ஜாதி ஸ்திரீக்கும் உண்டாகிற புணர்ச்சியானது ஏற்றதாகி ஸமரதமென்னப்படும், இவ்விதமான சேர்க்கையினுல் பிரீதியானது மிகவுமுண்டாகிறது, இவ்விதமன்றியே தகாததாகச்செய்கிற வெவ்வேறு ஜாதிகளின் சேர்க்கையை ஸ்திரீ எப்படி அங்கீகரிப்பாள்?

3. மிருகீஜாதி ஸ்திரீ, விருஷபஜாதிபுருஷன் ஆகிய இவர்களுக்கும், அஸ்வீ ஜாதி ஸ்திரீ, அசுவஜாதிபுருஷன் இவர்களுக்கும் உண்டாகும் புணர்ச்சியை மத்தியமாகச்சொல்லுகின்றனர், அசுவஜாதி ஸ்திரீயுடன் சசஜாதி புருஷனுக்கும், விரு

ஷபஜாதி புருஷனுடன் கரிணீஎன்னும் பெண்யானைஜாதி ஸ்திரீக்கும் உண்டாகும் புணர்ச்சி நீசரதம் (அதமப்புணர்ச்சி) என்று பெயர்பெற்றதாகி அந்த ஸ்திரீ புருஷாளுக்குச் சந்தோஷகாரணமாகிறதில்லை.

4. மிருகீஜாதி ஸ்திரீயுடன் துரகனென்னும் அசுவஜாதி புருஷனுக்கும், கரிணீஎன்னும் பெண்யானைஜாதி ஸ்திரீயுடன் சசமென்னும் முயல்ஜாதி புருஷனுக்குண்டானதுமான புணர்ச்சியை, கிரமமாக மிகவும் அதிகமானதும் மிகவும் குறைந்ததாகவும் சொல்லுகின்றனர், ஆகையால் ஏற்றதாகாமல் விபரீதமாக நடக்கும் விஷமபுணர்ச்சியில் பிராணசம்சயத்தைப்பெறினும் இவர்கள் காமகலை உருகிறதில்லை ஆகையால் அவர்கள் திருப்தியடைகிறதில்லை. மேல்விவரித்த சங்கதிகளை யோசித்து அதாது ஜாதிக்கேற்ற ஸ்திரீபுருஷர்களை அறிந்துசேரவேண்டுவது உத்தமம்.

———[—]———

## பனிரெண்டாவது அத்தியாயம்.

## கற்பு நிலைமையுடைய ஸ்திரீகளின் சிறப்பு.

———

1. கௌசிகன் மனைவியுடைய அநுஷ்டானத்தை இங்கு திருஷ்டாந்தமாக சுருக்கி யுரைக்கின்றனன். அதாவது பிரதிஷ்டானம் என்னும் நகரத்தில் கௌசிகன் என்னும் பெயரையுடைய ஒரு வேதியன் இருந்தான். அவன் முற்பிறவிகளிற் செய்த தீவினைப்பயனை குட்டநோயால் மிகநோதலை யடைந்தானாக அவன்மனைவி அத்தகைய கொடுநோய்க்குங் கணவனைத் தெய்வமாகவே நினைத்து, கால்கழுவல் வருடுதல், உடம்பினைத்தைவரல் எண்ணெய்பூசுதல், ஆடையுடுப்பித்தல், உண்டியுதவல், கபம், உதிரம் சீழ், மூத்திர புரீடமுதலிய வற்றின்பெருக்கினைப் பல்காலுங் கழுவல், அந்தரங்கமான வுபசாரமனைத்தினையும் புரிதல், அன்போடுரையாடல் மிகவடங்கி யொழுகுதல் முதலிய இத்த கயவகைகளையால், பொறுமையுடையவளாய்ச் சிறிதும் மனங்கூசாமற் சிரத்தையோடும் பூசித்து வந்தாள், அந்த நோயாளியோ அறக்கொடிய வெகுளியனுய் கிட்டே வார்த்தை களால்வைது, அச்சமுறுத்தி வருவன். அக்கற்புடையாளோ கொழுநன் அங்ஙனமாயினுந்தான் வணங்கித்தொழுது, அவனைக் கடவுளினு மிகச்சிறந்தோனும் ஆசாரியனுமாகக் கொண்டு கம்பிப்பணிபுரிந்திருந்தாள்.

2. பின்பந்த அந்தணன், உலாவித்திரியாதிருந்தானாயினும் மனைவியை நோக்கி யொருநாள், ஏடி பெண்ணே! இராஜமார்க்கத்திலுள்ள கணிகை மாதொருத்தியை இன்று காலையிற் கண்டேனாகை, இப்போது மாலையும் வந்தது. அந்த நோயோ என் மனத்தினை விட்டொழிந்ததில்லை. தருமமுணர்ந்தவளே! என்னை அவளிடஞ் சேரப்பண்ணுதி. கண்டதுமுதல் அவள் என்னெஞ்சை யொழித்தகலாள். ஆஹா! அவள்வடிவமுற்றும் எத்துணை மேன்மையது. அவளென்னை யணையாதொழியின் ஒழியாதழியு மென்னாவியாகவுடம் பொன்றினையே பின்னர் நோக்குவை. மானுடர்க்குக் காமமென்பது மிக வினிமையாவது அன்றோ! அம்மாதோ பலராலும் வேண்டப்படுபவளாகின்றனள். அவள்பால் யான் செல்வது முடிவுறாதேயாயினும் எண்ணமாத்திரமென்னைவிடாது துன்புறுத்துகின்றது என்றான்.

3. அங்ஙனம் காமத்தால் வருந்திய தலைவன் கூறிய சொற்கேட்ட அக்கற்பினளாகிய நற்குலமாது தன் ஆடையை நன்குடுத்தி, அவ்விலைமாதினுக்குக்கொடுக்கத்தக்க பணத்தினையுங்கொண்டு, தோளிற் கொண்கனைத்தாங்கி மெல்ல நடந்து, அந்த இராயமார்க்கமாக சென்றனள். அவ்விரவு மழைக்காலிறங்க கருகிருள் மூடி மின்னலால்வழிசாணலாயிற்று. இங்ஙனமாக, அவ்வழியில் முன்னமே களவு என்பது சற்று மறியாத மாண்டவ்வியர் என்னும் தொழுகுலச்செல்வர் களவுக் குற்றஞ்சார்த்தப்பட்டுத் தண்டனையாகக் கழுமுனை யேற்றப்பட்டிருந்தனராக, அவர் மகாவிருடி, இவ்விருளிற் செல்லுங்கற்புடைய மனைவி தோள் மேற்செல்லுங்கணவனான கௌசிகன் கால்பட்டு அம்மாண்டவ்விய முனிவர் அசைவுற்று வருந்தி கூறலாயினர், அநியாயமாக இவ்வாபத்துட்சிக்கி வருந்திக்கிடக்குமெனக்குமிகு நோயுண்டாம் படியாரால் காரணமன்றி யான் அசைக்கப்பட்டேனோ அப்படிப்பட்ட பாவியாகிய அதமன், சூரியனை நோக்குதலும் நாசத்தினை யடைக வென்று சபித்தனர்.

4. கற்பினலம் வெளிப்படுதல்:—அப்போது, அந்நோயாளனான கௌசிகன் மனைவி, அம்மாண்டவிய முனிவரிட்ட கொடுஞ்சாபங்கேட்டு வருத்தமுற்று, அங்ஙனமாயிற் சூரியனுதையமாகாதொழிகவென்று தானுஞ்சபித்தனள். ஆகவே, அப்பெருங்கற்பினள் சொல்லினுண்மை யுறுதியாற்பின் சூரியன் குணகடல் குளித்தெழுதலை யிழந்தான். உலகமெல்லாமிருள் சூழ்ந்து என்று மிரவாகவே யிருந்தது. அவ்விரவில் பல பகற்போதிறந்தொழிந்தது. அதனால் அமரரும் அச்சமுற்றனர், வேதமோதலொழிந்தது. "வஷட்டு, சுவாஹா, சுவதா" என்னு மந்திரங்களைக்கூறக்கடவதாய் கருமங்களொன்று மின்றாயது, அந்தோ! இவ்வுலகமெல்லாம் எவ்வாறு நாசமுறாது நிற்கும். இரவிது, பகலிது என்னும் வேற்றுமையில்லையாயிற் பக்ஷமெங்குள்ளது, மாசமேது, இருது எவ்வாறாம், இனிதக்ஷிணா

யனமெங்கே, உத்தராயனமெங்கே, யாண்டு என்பது மாண்டு கிடந்தது, அப்பால் காலவுணர்ச்சிக்கு மூலமுண்டோ, இக்கற்பினள் உரையால் சூரியன் புறப்படுதலில்லையாயிற்று. அக்கதிரவனெழாவிடின் மன்பதை ஸ்நானதானங்களைச்செய்யார், தீக்கருமமும் வேள்வியு நிகழாபோலும், வேள்வியில்லாவழி எமக்குத்திருத்தியுமுண்டாமே, மாந்தர் தக்கவாறு வேள்வியிலுரிய பாகத்தைக்கொடுக்கினவற்றாற் களிப்புற்றுப் பைங்கூழ்விளைய மழைபெய்வித்து மக்களைப்புரத்தல்செய்வேம். விளைவுண்டாயினவற்றான் மானிடரெம்மைப்பூசிப்பர். அங்ஙனம் பூசித்தார் எண்ணத்தினையும்யாம் முற்றுவிப்போம், யாம் நீர் பெய்விப்பேம், மாக்களெமக் கவிமழை பெய்விக்கின்றனர்.

5. எந்த மனிதன் எம்மை நோக்கி நித்திய கருமமும் நைமித்திக கருமமும் பிற கருமமும் தொடங்கி எமக்குரிய அவிற்பாகங்களைக் கொடானோ, அல்லது தானே நுகர்வானோ, அவனை யழித்தற் பொருட்டேயாம் நீர், இரவி, நெருப்பு, காற்று, நிலம் இவற்றைக் கெடுத்துவிடுகின்றேம். தனது தருமத்தினைத் தவறும்படி விட்ட அப்பாவிக்குக்கெட்ட நீர் காற்று முதலியவற்றால் நோய் முதலிய வேதனைகள் பிறக்கின்றன. கொடியவக்குற்றங்கள் அவர்கள் மரணத்தினுக்கு ஏதுவாகின்றன. எங்களைக்களிப்பித்தல்செய்து முறையே கருமங்களைச்செய்து மிக்க சேடத்தினை அனுபவிக்கின்ற பெரியோனுக்குப்புண்ணியமும் போகமும் யாமளிக்கின்றனம். இங்ஙனமாக, அவைகளனைத்திற்குங் காரணனான பகலோனில்லாமையால் மழையன்றி மேற்கூறியவனைத்தும் கட்டோடு சாய்ந்து அந்தோ! இங்ஙனமாயிற்றாக வினிபகற் போதெவ்வாறுண்டாம், வேள்வியற்றதேபோலும் என்றிவ்வாறு சுரர்கள் ஒருவரோடொருவர் பேசி, ஏக்கமுற்றுச் சிந்தித்திருந்தனர்.

6. அங்கு அம்மொழிகளைப் பிரமதேவன் கேட்டுரைக்கலாயினர். ஓ! தேவரே! ஒளியொழியானே யடங்கல்வேண்டும், தவம் தவத்தாலே யொடுங்குகின்றது. ஆதலால் என்னுரையைசகேட்பீர்களாக. கற்பினளது கற்பின் பெருமையாலினி வேறு சூரியன் காணப்படுதலில்லை. அதனாலுங்களுக்கும் மானுடர்க்கும் நேருந்துன்பமொழியாது. ஆயின், அத்திரி முனியின் பன்னியும் பெருங்கற்பினளுமாய் அனுசூயையை நீவிரனைவருஞ்சென்று வழிபட்டு ஞாயிறெழுச்சியின் பொருட்டுப் பிரார்த்திப்பீர்களாகவென்றேவலுந்தேவர் சென்று அவ்வம்மையைத் துதித்தனர்.

7. பின்பவ்வாறே தேவராற் பூசிக்கப்பெற்றவவ்வனசூயையானவர் நீவிர் வேண்டிற்றை விளைவுதீரெனத்தேவரும் முன்போல ஏற்பாடுண்டாகவென்று வேண்டினர். வேண்டலும் அவ்வம்மை யுற்று நோக்கிக் கற்புடையாளது

பெருமைபடுவதல்ல ஆகலின் நீவிரனைவரும் அவ்வம்மையாரை நன்றுஉபசரியின். முன்பாலு முறையே யிரவும் பகலுமுண்டாதல்வேண்டும். அக்கற்புடையாள் கணவனுமுயிர் பெற்றிருத்தல்வேண்டும். அங்ஙனம் பகலையாக்குகின்றேன் என்றுகூறியநுசூயையார் அக்கற்பினள் மனைக்குச்சென்றனர்.

8. அநசூயையார், அக்கற்புடையாளது மங்கலத்திருமனைக்குட்புக்கு அவளாலுபசரிக்கப்பட்டு க்ஷேமங்களை விசாரித்தனராய், செல்வத்திருமகளே! நீயும், உன் கணவனும், உன்னறமும் நன்று வாழ்கின்றனிரோ, சௌபாக்கியவதி! உன் கணவன் முகத்தினைக்காண்டலன் மாத்திரையாற் களிப்படைகின்றனையன்றோ, தேவரனைவரினும் நின்கொழுநன் சிறந்தோனாக நீஓம்புகின்றனையன்றோ, யான் என் வினவுவதென்னையேல், மாதர்க்குக் கற்பொன்றினாலே யெல்லா மேன்மையுமுண்டாதல்வேண்டும். என்தலைவரை நான் பூசித்தலாலே பெரும் பயனை யடைந்திருக்கின்றேன்.

9. அதுகேட்ட அக்கௌசிகன் மனைவியன்போடு அன்னையே! நன்று கூறினீர் என்று மிகுந்த வடக்கத்துடன் கூறத்தொடங்கினள். இயற்கைமங்கலக் கருஆலமாகிய என்னம்மே! எனக்குச்சிறிதேயுண்டாயிருந்த பதிபத்தியை வளர்க்கின்றனையே! யான் புண்ணியமுடையவளாயினேன். அருளப்பாட்டையும் பெற்றவளாயினேன். தேவராலும் நன்றருள் செய்யப்பெற்றேன். தேவரீர்கூறிய செய்தியானுமறிவேன். உண்மையே! மாதர்க்குக் கணவனோடொத்த நற்கதி சத்தியமாகவே வேறொன்றுமில்லை.

10. அப்போது அநசூயையானவர், இத்தேவர்கள் இந்திரனோடும் என்பால் வந்து குறையிரந்தனர். உன் வாய்ச்சொல்லினால் இராப்பகலும், அவ்விராப்பகலினுண்டாம் நற்கருமமும் இழந்தோராய்வருந்தி, முன்போல பகலிரவு வுண்டாகப்பெறுதல்வேண்டி நின்னையிரக்கின்றனர். அவர்பொருட்டாக யானும் நின்மனைக்கு வந்தேன் யான் கூறும் மொழிகளைச் சற்று நெஞ்சிருத்திக்கேட்பாயாக பகற்போதின்மையால் யாவருக்கும் வேள்வி முதலிய கருமங்கள் இன்றாயின. அதனால் வானவர்களனைவரும் உண்டியற்றவர்களாயிளைக்கின்றனர். ஆதலால் தவமுடையாளே! பகலேயில்லாதொழிந்தால் எத்தொழில்தான்நடக்கும். சூரியன்காணாவிடின் மழையும் பெய்யுமா! மழையின்றாகில் உலகம் பிழைக்குமா, உன்சொல்லால் உலகமே பாழ்படுகின்றது. உலகமனைத்திற்குமுண்டாயிருக்கும் பேரிடரை, ஒழிக்கவேண்டுமென்னும் கருணையுனக்குண்டாகுமாயின் கற்புடையாளே! முன்போலச் சூரியோதயமாம்படி அனுக்கிரகித்தலைச்செய்யென்றார்.

11. அங்ஙனம் அந்த பார்ப்பனியும், பெரும்புகழ்க்கற்பின் அநுசூயையாரே! மாண்டவியமுனிவர் பெருஞ்சினம்பூத்தவராய்ச் சூரியனுதயமானால் நீயிறந்தொழிவாயென்று என் தலைவரைச்சபித்தனரே யான் என்செய்யக்கடவேன் என்றாள்.

12. அதற்கு அநசூயை ஓ! கற்புடையாய்! யான் சொல்லுஞ்சொல்லுனக்கு இனிமையாயிருப்பின், யான் எனதுமொழியால் உன் கணவன் முன்போல நல்லயாக்கையுடையனாய்ப்பிழைத்திருக்கச்செய்கின்றேன். யான் கற்புடைமாதரிடத்துப் பெரும்புகழையும் மகிமையையும் சிறப்பச்செய்தற்பொருட்டே எப்பொழுதும் முயல்வது. ஆதலால் இங்ஙனம் யான் நின்னையிரக்கின்றேன் என்றார்.

13. பின்னர்க்கௌசிகன் மனைவி, அநசூயையார் மொழியைக்கேட்டு, அவ்வாறேயாகவென்றாள். அப்பால், பெருந்தவமுடையாளாதலின், அவ்வநசூயையார் பத்திரவுமோரிரவாகிய அவ்விரவில் அர்க்கிய சலத்தைக்கையிலேந்திச்சிந்தித்து மார்த்தாண்டனை வரக்கூவினள், உடனே அச்சூரியனும் அன்றலர்ந்த ஆயிரத்திதழ்த் தாமரைமலர்போலுஞ் செம்மண்டலமுடையனாய் உதயகிரியிற்றோன்றினான். பின்பக்கணத்திற்றானே அக்கற்புடையாள் கணவன் ஆவி உடம்பினைவிட்டது. அவனும் நிலத்து விழுந்தான், விழுகையில் அக்கற்புடையாள் தாங்கிக்கொண்டனள்.

14. அப்போது அநசூயையார், அவளை நோக்கி, ஓ! சௌபாக்கியவதி! நீ வருந்தவேண்டாம், என்னுற்றலைப்பார். யான் நெடுங்காலமாக என் கணவரைத் தொழுது சிறு தவமுடையவளாயிருக்கின்றேன். என் மனமானது எனது நாயகரோடு, கல்வி, அறிவு, ஒழுக்கம், வடிவு அழகு, இயற்கை, சொல்லினிமை, ஆற்றல், தவம், பெருமை, செல்வமுதலியவற்றுளொன்றுலும் ஒத்த வேறொரு புருடன் உள்ளானெனக் காணாமலிருப்பது எவ்வாறு சத்தியமாயிருக்கின்றதோ அப்படிப்பட்ட சத்தியத்தால் இவ்வேதியனும் நோயொழிந்து மீட்டும் இளமைபெற்று, உயிர் பெற்று எழுந்து மனைவியோடு நூறு வருடம் பிழைத்திருக்கக்கடவன்!! என் கணவனுக்கு ஒப்பான வேறு தெய்வத்தினை நான் பாராதது எவ்வாறு சத்தியமோ, அச்சத்தியத்தினால் இவ்வேதியன் மீட்டும் பிழைத்து நோயற்றவனாய் வாழ்க! நான் எப்பொழுதும் என் கொழுநரைப் பூசிப்பதற்கு, மனம், வாக்கு, காயம் இவைகளால் வழுவின்றி முயற்சிப்பது எவ்வாறு சத்தியமோ, அந்தச்சத்தியத்தால் இவ்விரு பிறப்பாளன் பிழைக்கக்கடவன் என்று பிரமாணத்தோடும் இங்ஙனம் முக்காலுங்கூறினர்.

15, கேட்டீரோ! பின்னர் கௌசிகன் என்னும் வேதியன் பிழைத்தெழுந்து நோயொழிந்து, இளமைபெற்றவனாய்த்தன் தேசவொளியால் மனைமுழுவதும் பிரகாசிக்கச் செய்தவனாய் அமரர்களைப்போலும் மூப்பற்றவனாயிருந்தான். பூமழை பொழிந்தது. தேவ துந்துமி முழங்கிற்று. தேவர்களனைவரும் பெருமகிழ்ச்சியடைந்து அவ்வனசூயைத்தாயை நோக்கி, ஓ மங்கலப்பெருக்குடையீர்! உமக்கு என்னை வேண்டுவதோ அதனைக்கேளும், வானவர்கட்காகத்தக்க பெருங்கருமத்தினை முடித்தனிராதலால் அவர்கள் வரந்தரலாயினர்.

16. அனசூயையாரும், பிரமதேவன் முதலிய தேவர் மாரும் வந்து அருள் செய்பவர்களாயிருந்து, யான் வேண்டும் வரத்தினுக்கு யான் தக்கவளே என்பதும் உங்கள் உள்ளத்திற்குந்தோன்றுமாயின் பிரமா, விஷ்ணு, மகேச்சுவரன் என்கிற மூவரும் என் மகவாகப்பிறக்கக்கடவர். என் கணவரோடும் யான் துன்பவொழிவின் பொருட்டு யோகத்தினைப்பெறுக. அவித்தை, அஸ்மிதம், இராகம், துவேஷம், அபிநிவேசம் இவ்வைந்தும் கிலேசமெனப்படும். கிலேசம் துன்பம் என்றார்.

17. அப்போது பிரமா, விஷ்ணு, உருத்திரர் முதலிய தேவர் அவ்வாறே யாகுகவென்றுகூறி, தவமுடையவராகிய அவ்வனசூயையாருக்கு குறையை அனுக்கிரகித்துப் பழையபடி தத்தமிடஞ்சென்றனர்களாம்.

கற்புநிலைமை முற்றிற்று.

---

## ஸ்திரீயின் சிறப்பு.

1. இப்பிரபஞ்ச உற்பத்திக்கும் விருத்திக்கும் வாழ்வுக்கும் இகபர புருஷார்த்தம் முதலிய சகல இஷ்ட ஸம்பத்துகளுக்கும் ஸ்திரிகளே இன்றியமையாத முக்கிய காரணக் கருவிகளாக விளங்குகின்றார்களென்பது ஊன்றி விசாரித்தால் தெரியலாம். ஆகையால் அவர்களை அவமதியாமல் எப்போதும் மகிழச்செய்து உபசரித்து அவர்களது மனங்கோணாது கௌரவமாகவும் மரியாதையாகவும் நடத்திவரவேண்டியது.

2. உலகத்தை முழுதும் வெறுத்தவர்கள், ஸ்திரீகளைப்பற்றிக் கெடுதியாகப் பேசுகிறார்கள். ஆனால் உலகப்பற்றுள்ளவர்கள் அப்படி பேசுவது அவர்கள் மிகவும் ஞானமில்லாதவர்களாக அடியனுக்கு தோற்றுகிறது. இவர்கள் ஸ்திரீகளின் நற்குணங்களைப்பற்றி ஒருபோதும் பேசுகிறதில்லை.

3. ஸ்திரீகள் புருஷர்களால் சாற்றப்படாத குற்றம் ஏதாவதுண்டா? உண்மையைச்சொல்லுங்கள். ஸ்திரீகளை வெறுக்கிறவர்களே, அவர்களின் புத்தியீனத்தினாலே அப்படிச்சொல்வார்கள்; மனு நீதிப்பிரகாரம் ஸ்திரீகள் புருஷரைவிட நல்லவர்களென்றே சொல்லவேண்டும்.

4. சோமதேவர் ஸ்திரீகளை சுசியுடையவர்களாக ஆசீர்வதித்திருக்கிறார்; காந்தருவர் அவர்களுக்கு பரிசுத்தமான பேச்சைக் கொடுத்திருக்கிறார். அக்கினி தேவர் யாதொரு தடையுமின்றி தாங்கள் இஷ்டப்பட்ட உணவுகளைச்சாப்பிட சுதந்தரத்தைக்கொடுத்திருக்கிறார்.

5. பிராமணர்களுக்கு பரிசுத்தம் பாதத்திலும், பசுக்களுக்கு அரையிலும், ஆடு, குதிரைகட்கு முகத்திலும், ஸ்திரீகளுக்கு திரேக ஆத்தியந்தமுமாம்.

6. ஸ்திரீகள் அதிக சுசியுடையவர்களும், குற்றமற்றவர்களும் சாதுக்களுமாகின்றனர். அப்படி ஏதாகிலும் அசுத்தமிருக்குமாயின் அது மாதவிடாயில் கழிந்து விடுகிறது.

7. பூஜயதை செய்யப்பட்ட ஒரு ஸ்திரீயால்சபிக்கப்பட்ட ஒரு குடும்பமானது, பில்லி சூனியத்தினால் அழிவதுபோல் அழிந்துவிடும்.

8. ஓர் ஸ்திரீ ஒரு புருஷனுக்கு மனைவியும், தாயுமாகிறதாக சாஸ்திரத்தில் சொல்லப்படுகிறது,

9. புருஷர் ஸ்திரீகளிடத்துஉற்பத்தியாகிறார்கள்; ஆதலால்ஸ்திரீகளைத்தூஷிக்கிறவர்கள் நன்றி அறியாதவர்கள். ஓ ஜனங்களே! அப்படி தூஷித்தால் நீங்கள் எப்படி சுகப்படுவீர்கள்;

10. ஸாஸ்திரத்தின்படி விபசாரமானது புருஷனிடத்தும், ஸ்திரீயினிடத்தும் பொதுவாகவே குற்றமாகக்கொள்ளப்படும். அப்படிப்பட்ட அந்த குற்றத்தை புருஷர் அசட்டை செய்கிறார்கள்; ஆனால் ஸ்திரீகளோ அப்படிச்செய்கிறதில்லை; ஆதலால் ஸ்திரீகள் சர்வ பிரகாரத்தாலும் புருஷர்களுக்கு மேன்மையுண்டாக்கும்படி செய்யப்பட்ட அன்பர்களாகின்றார்கள்.

11, சாஸ்திரத்திற்கு விரோதமாய் ஒரு புருஷன் விவசாரம்பிசெய்வானாகில், மயிருள்ள கழுதைத்தோலைபோர்த்துக்கொண்டு ஆறுமாதகாலம் அனுதாபப்பட்டுப்பிச்சை எடுத்தால் பரிசுத்தனாகிறான்.

12. ஒருவன் நூறு வருஷகாலம் ஸ்திரீயின் இன்பத்தை அனுபவித்தாலும் அந்த ஆசை நீங்கி திர்ப்தி அடைகிறதில்லை, புருஷர் தங்கள் பத்னி இறந்தபிறகு தங்களுடைய திரேக அசக்தியினாலேயே ஸ்திரீயின்பத்தை துறக்கிறார்கள்; ஆனால் ஸ்திரீகளோ தாங்கள் கைம்பெண்ணாயும் கற்பு நிலையை நிறுத்தி வேறொரு புருஷருடன் சுகிக்கிறதில்லை,

13. ஒரு குற்றமற்ற ஸ்திரீயை நிந்திக்கின்ற ஒருவன் திருடனுக்கு ஒப்பாகிறான்.

14. புருஷன் தன் பத்தினியுடன் தனிமையாயிருக்கும்போது, அவளிடத்தில் சுகமான வார்த்தை ஆடுகிறான், அவள் இறந்தபிறகு அவளை மறந்துவிடுகிறான்; ஆனால் ஸ்திரீகளோ தங்கள் கணவரிறந்தகாலத்தில், அவர்களிடத்துள்ள அன்பால் உடன்கட்டை ஏறும்படி வருந்துகிறார்கள்.

15. ஒருவன் தரித்திரனாயினும், ஒரு நற்குண, நற்செய்கைஉள்ள ஸ்திரீயைப்பெறுவானாகில், அவன் அரசனையொத்த பாக்ய வந்தனாகிறான். அரசனுக்கு அருந்தலும், பொருந்தலுமே முக்கியமான இன்பங்களாம். இவை, நெருப்பை அதிகரிக்கக்கட்டை உதவுவதுபோல அவனுடைய எண்ணங்களை விர்த்திசெய்கின்றன.

16. மங்கைப்பருவமடைந்து, குறுகிய, மெதுவான, மனோகரமானவார்த்தையுடையவளும், உயர்ந்தும் பெரியதுமான குசங்களைஉடையவளும், சிற்றின்பத்தில் முழுஆசை உடையவளுமான ஓர் ஸ்திரீயின் ஆலிங்கனத்தை ஒப்பானதோர் இன்பம், சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமாவின் சத்யலோகத்திலுங்கிடையாது.

17. ஓர் அரசன் வெற்றியினால் அடைந்த தேசத்தில் முக்கியமானது பட்டணமாம், அப்பட்டணத்தில் முக்கியமானது வீடுகள், அவ்வீடுகளில் முக்கியமானது படுக்கைஅறை, அதில் முக்கியமானது கட்டிலும், மெத்தையும், அக்கட்டிலில் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு ஸ்திரீ சயனிப்பது இராஜபோகமாம்.

18. ஸ்திரீகளால் இரத்தினங்களுக்கு அழகு உண்டாகிறது, ஸ்திரீகள், இரத்தினங்களால் அழகடைகிறதில்லை ஏனெனில் ஸ்திரீகள் இரத்தினங்களால் அலங்கரிக்கப்படாமலிருக்கும்போதும், புருஷாளுக்கு மனோகரமானவர்களாகவும், அவர்களின் ஆசையை விர்த்திசெய்கிறவர்களும் ஆகின்றனர் ஆனால் இரத்தினங்களோ அப்படி ஆகிறதில்லை.

19. தங்கள் எண்ணத்தை யாவருக்கும் வெளிப்படுத்தக்கூடாதவரும், சத்துருக்களை ஜயிக்க விருப்பமுள்ளவரும் அரசுக்குரிய அநேக தந்திரங்களில் தங்கள் மந்திரிகளின் யோசனைகட்கு உட்படத்தக்கவரும், தாங்கள் செய்யும் காரியங்களால் பயமும், தோற்பும் சம்பவிப்பதாக சந்தேகிப்பவரும், அநேக விதமான கவலைகளிலும், ஆசைகளிலும் மூழ்கினவருமான அரசர்களுக்கு, அழகிலும், குணத்திலும், ஒழுக்கத்திலும் சிறந்தமாதின் ஆலிங்கனமே உரிய இன்பமாம்.

20. பிரம்மாவானவர் ஸ்திரீ ரத்தினத்திற்கு மேலான ஓர் இரத்தினத்தை எவ்வுலகினும் சிருஷ்டிக்கவில்லை; ஏனென்றால் அவர்களுடைய வார்த்தை, நோக்கம், ஸ்பரிசம், எண்ணம் இவைகள் புருஷனுக்கு மனோகரமான எண்ணங்களை உண்டுபண்ணுகின்றன.

21. அந்த ரத்தினம் ஒருவனுக்கு பெண் உருவமாய் கிடைப்பது, அவன் செய்த புண்ணியத்தின் பலனாகும். அந்த ஸ்திரீ ரத்தினத்தினால் புருஷன் மக்களையும், இன்பத்தையும், அடைகிறான். ஆதலால் ஓர்க்குடும்பத்தில் ஒரு ஸ்திரியானவள் லட்சுமிபோன்றிருக்கிறாள், ஆகையால் அவளை மரியாதைசெய்து, அவளுக்கு வேண்டுவனகொடுத்து திர்ப்திசெய்யவேண்டும்.

22. பிரம்மலோகத்திலுள்ள முனீஸ்வாரும், சித்தரும் தங்களை மரியாதை செய்கிறவர்களுக்கு தாங்தள் மரியாதை செய்கிறார்கள். அப்படிப்பட்ட மரியாதையினால் உண்டாகும் இன்பத்தினால் என்ன ஆனந்தம் உண்டு, சௌந்தரியமும் சுகுணங்களுங்கூடிய மாதின் சுகத்தை அனுபவிக்கின்றவர்களுக்குச் சமானமாகார் ஏனெனில், நாம் பிபீலிகாதி பிரம்மா பரியந்தம், ஆணும், பெண்ணுங்கூடிச்சுகிக்கிறதாகக்காண்கிறோம்.

23. ஸ்திரீகள் எப்போதும் புருஷர்களுக்கு அடிமைப்பட்டவர்களாகவும் நவவித சம்பந்தமுடையவர்களாகவும், கிரகங்களிலிருந்து சர்வகால சர்வதேச சர்வாவஸ்தைகளிலும் பர்த்தாக்களின் சரீரத்தைப்பேணுதல் அறுசுவையுண்டி அமைத்திட்டுதல் தேவர்பூசை பிதிர்பூசை முதலானதுகளுக்குதவுதல் கஷ்டம் வந்த காலத்து தங்கள் கணவர்களுடைய துக்கங்களைத்திரணமாத்திரமாகும்படி அவர்களை சந்தோஷிக்கச்செய்தும் போகங்களில் வசப்படுத்தியும் அகமகிழச்செய்தும் இல்லறத்துக்குரிய சகலவஸ்துக்களையும் சேகரித்துபாதுகாத்தும் அதிதிதென்புலத்தார்க்கு பிட்சையிட்டும் சத்கிரிகை துர்க்கிரிகைகளுக்கும் கூடயிருந்து அனுகுணமான காரியங்களைச்செய்தும் பர்த்தாவை எமபடாதிகள் தீண்டாதவண்ணம் சற்பை நிலை நிறுத்தியும் மோக்ஷ சாம்பிராஜ்யத்தை நாயகனுக்காகத்தேடிவைத்தும் மற்று எல்லாவித நன்மைகளையும் சாலானு குணமாக செய்வித்தும் துக்கமென்பது கொண்கனுக்கு ஸ்பரிசியாமல் பாதுகாத்தும் சிசுக்களைப்பெற்று மகிழச்செய்தும் கணவர்களை துர்மார்க்கத்திற் நின்று விலக்கியும் இவ்விதமாய் இகபரங்களுக்குரிய சகல காரியங்களுக்கும் உத்தாரகர்களாயிருந்து பாலித்து வருகையில் இவ்வுலகத்தில் கிருகக்ஷேத்திரங்கள் ஆடையாபரணங்கள் முதலிய சம்பத்துக்களை புருஷர்கள் திரைகடலோடியும் ஆர்ஜித்துக்கொண்டு வருகைக்கு இந்த ஸ்திரீகளே காரணபூதர்களாகையால் இவர்களை மரியாதையாகவும் மேன்மையாக

வும் சர்வ காலத்திலும் நடத்திவரவேண்டுவது புருஷர்களுடைய முதன்மையான கடமையாயிருக்கின்றது. என்று மறுபடியும் இங்கு விபரமாய் எடுத்து உரைக்கப் பட்டிருக்கின்றனன்.

கற்பு நிலைமையும் ஸ்திரீயின் சிறப்பு அத்தியாயம் முற்றிற்று.

பதிமூன்றாவது அத்தியாயம்.

## ஸ்ரீவைணவமங்கையர் வாழ்க்கைப்பாட்டு.

இம். காம்போதி. தாளம் ஆதி.

1. "அக்கம்பக்கஞ்செல்லாதே யவரைத்தொட்டுக்கொள்ளாதே
அவர்கொடுப்ப துண்ணாதே யவர்நேசத்தைப்பண்ணாதே
தக்கவைணவரென்றால் தாழ்ந்துவணங்கிப்போற்றிச்
சக்திமட்டுங்கொடுத்தே தாழ்ந்துவணங்கவேண்டும்.

2. நித்தங்குளிக்கவேண்டும் நிலத்தைமெழுகவேண்டும்
நிலவுபாத்திரமெல்லாம் நலமாய்துலக்கவேண்டும்
பத்தியுடன்றனியன் பல்லாண்டுதிருப்பாவை
பலவுஞ்சொல்லிக்கொண்டு தளிகைசமைக்கவேண்டும்.

3. திருக்கண்முதாம் பிரசாதம்சாத்தமுதமாம்
திருமணம்பரிமாறும் நழுகறியமுதமாம்
வருக்கக்கறியமுதி னேடுவைணவப்பேச்சு
வடித்துச்சொல்லி பரிமாற்றஞ்செய்யுதல்வேண்டும்.

4. கண்டகோவிலுக்செல்லா ங்கையெடுக்கக்கூடாது
காணுர்திருவிழாக்கள் தோறும்போகக்கூடாது
பண்டாரப்பாட்டுக்கூத்தும் பார்க்கக்கேட்கக்கூடாது
பரத்தையரைக்கண்ணாலும் பார்த்துப்பேசக்கூடாது.

5. திருமந்திரம்திருப் பல்லாண்டு திருவாய்மொழி
திவ்யப்பிரபந்தங்கள் சொல்லிக்கொள்ளவேண்டும்
வரும்பாகவதர்தம்மைப் பூசித்தவரருள்செய்
வாக்கியங்களைக்கேட்டுப் பாக்கியம்பெறவேண்டும்.

6. ஆராதனஞ்செய்யாம லருந்தலாகாதுநித்தம்
அடியார்க்கிட்டுண்டால்முத்தி யடைவதாகும்சத்தியம்
காரணைகாத்தார்க்கிணையாகவோர் தேவைச்சொன்னால்
கற்பத்தளவுந்தீவாய்க் கவிழ்ந்துருளுதல்வேண்டும்.

7. தான்றனதற்றுமாயோன் கல்யாணகுணங்களைச்
சாற்றுங்கோஷ்டியிற்கூடி சங்கைதீர்ந்திடவேண்டும்
கோனுற்றதலந்தோறுஞ் சென்றுசேவித்தடியார்
குலவும்பதிகள்போற்றி குறைதீர்ந்திடவும்வேண்டும்.

8. தாமரைமலர்போலுஞ் சந்திரப்பிறைபோலுந்
தவளவெண்மண்ணைநெற்றித் தன்னிற்காப்பிடவேண்டும்
வாமமுடையமஞ்சட் பொடியைத்தீபாகாரம்போல்
வைத்தேமனதிலுள்ள மகிழ்ச்சிபெற்றுய்யவேண்டும்.

9. நெற்றிதனிலேசாம்ப விட்டாலும்வேறுதேவை
நினைத்தாலும்படைத்ததை நினைவில்லாதுண்டாலும்
சற்றுஞ்சந்தேகமில்லாது பேய்கள்சுடுகாட்டில்
தானுங்கிடந்துதீவாய் சனித்தாடல்வேண்டுமெய்.

10. கண்டதெய்வத்தையெல்லாங் கடவுளென்றுதொழுதோர்
கணவனைவிட்டுவேறே கண்டபேரோடுபோனோர்
கொண்டநரகங்கொண்டே கோவிந்தனடிவிண்டே
குறுக்குயோனியிற்சன்மங் கோடிகோடிகொள்ளல்வேண்டும்.

11. எத்தனைபேர்களென்ன சொன்னாலும்பழித்தாலும்
இன்பமுடனேதன்ன னிணையடிமறக்காமல்
அத்தனைபொழுதேனும் பிரகலாதன்போல்நன்மை
யனுபவித்தழியாவா னந்தத்தாகுதல்வேண்டும்."

———0———

## மகளுக்கு தாய் அறிவுறுத்தல்.

கண்ணிகள் இம். சாமா. அடதாளம்.

1. "வாழிமகளேநீசெய்மாதவங்கோடியால்-வரதன்கருணையடியம்மா
வைணவனேநிற்குமணவாளனாயது-வருந்தியும்வராதடிசும்மா

2. கண்ணனருளுநின்கணவன்றன்சொல்லை-கடவாதுகாரடிகண்ணே
காரணவாரணநாரணனிவனென்றே-கருதிநடவடியென்பெண்ணே

3. கோவிந்தனடியார்கள்வேறொருதேவனைக்-கும்பிட்டறியாரடிகிளியே
கோட்டியூர்நம்பியார்தீட்டியவார்த்தையைக்-கொழுநனைக்கேட்டுத்தெளியே

4. மறந்தும்புறந்தொழாத-மாந்தரென்றாழ்-வார்கள்வழங்கியதறியடிமானே
மாசிலிரணியன்மகன்யானைதுருவன்சீர்-வாழ்த்தடிவைணவத்தேனே

5. ஆசானருள்செய்யட்டாக்கரப்பொருள்தன்னைநீ-யடியார்பால்கேளடியுத்தமியே
யதின்பதமூன்றுமேயன்னியசேட-மகற்றெனலோரடிபத்தினியே

6. எம்பெருமானாரவ்வம்மங்கையார்க்குச்சொல்-அஞ்சுவார்த்தைகளுண்டுகண்டாயே
எண்ணிநடப்பவருக்கிகலோகபரலோக-மேத்துஞ்சுகமழியாதுண்டாயே

7. போலிவைணவர்சமயநெறியறியாப்-புலையர்போல்தேவைப்போற்றுவாம்
போற்றுதல்கண்டுநின்புந்திமயங்காது-புல்லர்தொழிலென்றுநீதூற்றுவார்

8. பலதெய்வத்தாற்றுன்பம்வந்ததவர்க்கெல்லாம்-பலிசெய்யென்பாரடிபாவாயே
பாதகர்சொற்கேட்டுப்பரத்தையர்போலநீ-பலியிடின்றீவாயில்வீழ்வாயே

9. எங்குநிறைந்தறிந்தவெம்மான்பங்கிருக்க-வெத்தேவன்செய்யுமடிகொம்பனாய்
இறைநிலையறியாதாரீனப்புத்தியினாலே-யிசைப்பதெல்லாம்பெரும்பேனாய்

10. கன்னிப்பேரென்றலூரைக்காப்பிடுங்காளியார்-கண்ணனடியனுக்கேசேவித்தாள்
காணிக்கையீந்தவர்காலைத்தலைமேற்கொண்டு-கலிகாலத்தினுமுண்டுபாவித்தாள்

11. நஞ்சீயர்நம்பிள்ளைகலியன்றிருமழிசை-நாதன்விட்டுணுசித்தர்கோவலூர்
நந்நருவண்டர்சண்டர்மீளகாழ்வான்-ரனசாரர்நடத்தியவாசாரத்தாவல்பார்

12. அருந்ததியாண்டாள்பாஞ்சாலிசாவித்திரி-யநளாயினிதமயந்திநல்
அரிச்சந்திரன்மனைவியுருக்குமாங்குதன்றேவி-கற்பினைநாடிவந்தித்துநில்

13. ஆக்கையழியுங்காறுமரியடியருக்கிட்ட-தன்றிமற்றவைதீண்டிநீயுண்ணாதே
யவ்வினையாளரோடேகேண்மைகொள்ளாமல்--வேறேயர்ச்சிப்பார்நேசமதைப்பண்ணா
(தே

14. ஒருதினமேனுமெம்மாழ்வாராரியர்-சீர்மையெண்ணாதகாலத்தைநீயோட்டாதே
தன்னையாள்துவயம்பல்லாண்டுதிருப்பாவையை—யொழியயுன்னாவிற்கொள்ளுங்காட்
(டாதே"

## கடவுளிடத்து நன்றிமறவாமை.

இச்சீவர்கட்கு வேண்டிய போகபோக்கியங்களை தமது திருவுள்ளத்திலெண்ணிச் சகலவுணவுகளை கொடுத்தும், அவைகளுண்டாவதற்கு முதற்காரணமாகிய மேகங்களைப்படைத்தும், மேகத்திற்கு காரணமாகிய சூரியசந்திர நக்ஷத்திராதிகளைப்பிழையன்றிச்செலுத்தியும், இப்பூமியை அசையாது நிறுத்தியும், ஆகாயத்து இடி மழை மின்னலாதிகளை தனக்குரிய நெறி கடவாதிருத்தியும், சண்டப்பிரசண்டமான வாயுவை நிதானத்தடக்கிவிடுத்தும், தலைக்குமேலாகிய கடலை அணைகடவாதடக்கியும், பர்வதங்களை அசையாது நிறுத்தியும், பூத பிசாசு ராக்ஷதர்களை மீறாது அச்சமுறுத்தியும், "கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுட்டேரைக்கும் விருப்புற்ற முதளிக்கும் மெய்யன் உருபெற்றால் ஊட்டிவளர்க்காரோ ஓ நெடுவாய் அன்னாய் கேள்வாட்ட முனக்கேன் மகிழ்" என்றபடி, தமக்கோர் இடையூறுமில்லாமல் நடத்தியும், கண்ணுக்கிமைபோலும். உடற்குயிர்போலும், கன்றுக்குப்பசுவைப்போலும் மிகவும் பரிவாககாத்து ரக்ஷிக்காநின்ற பெருங்கருணைக்கடலாகிய கடவுளிடத்து அவரது வரம்புகடந்த பெருநன்றியறிந்து அன்புடன் ஆராமையுற்ற மனத்தாலிடைவிடாது நினைத்துருகி தோத்திரித்து வணங்கி அவரது திருவடிச்சேவைக்கு அவா வருதலே அவருக்கு நாம் செய்யும் நன்றிமறவாமையென்று அநேக வேதாகம புராண சாஸ்திரங்களெல்லாம் முறையிடுகின்றன.

## பரத்வ நிர்ணய சங்கிரகம்.

எனதன்பின் மிகுந்த சகோதர சகோதரிகளே! இவ்வடியில் குறிப்பிட்டிருப்பதை நன்றாக கவனித்து இதுவரையுள்ள சகல சந்தேகங்களையும் இதைகண்டவுடன் நிவர்த்திசெய்துவிட்டு உண்மையான கடவுளையும் உண்மையான மார்க்கத்தையும் கசடறத்தெளிந்து தேறி ஒருமனப்பட்டு அந்த ஒன்றாகிய கடவுளை வணங்கி அனுஷ்டித்து வரும்படி மிகவும் கேட்டுக்கொள்கிறேன். அதாவது, இப்போதையக்கலிகாலத்தில் உண்மையாகிய கடவுள் திருமாலொருவனேயென்று நம்பி திருமாலை ஆராதிப்பது மிகவும் வெகு அருமையென்றுணருங்கள்! வேதத்துக்கு மாறில்லாதிருப்பதுவே சாத்திக நூலென்றும், அதுதான நிச்சயமான நூலென்றும் அதின்படி வொழுகுவதே மோக்ஷத்துக்கு ஏதுவென்றும் நிச்சயமாக அறியுங்கள். இந்த வுலகத்தில் யாதாமொன்று காணப்படுகிறதோ, கேட்கப்படுகிறதோ, அந்த எல்லாப்பொருளையும் உள்ளும் வெளியும் நிறைந்து நாராயணனவனிருக்கின்றான், அனந்தனென்கிற பெயரையுடையவனும், நாசமில்லாதவனும், எல்லா சப்தங்களையும் உச்சரிக்கிறவனும், சமுத்திரத்தில் வசிப்பவனும், சகலத்திற்கும் நன்மையை விளைக்கிறவனும், உயர்ந்த வாஸ்தவமான பொருளும், உயர்ந்த ஜோதியும், உயர்ந்த ஆத்மாவும், எல்லாப்பொருள்களையும் பார்க்கிறவனும், எல்லாவற்றிற்கும் க்ஷேமத்தைசெய்பவனும். எல்லாப்பொருள்கட்கும் ஆத்மாவானவனும், அப்படி ஆத்மாவானாலும் அதின் தோஷங்களை அற்றவனும், எல்லாவற்றிற்கும் உயர்ந்தவனும், எல்லாப்பொருளுமாயிருக்கிறவனும், ஸமஸ்தப்பிராணிகளுக்கும் ப்ராப்யமாயும் அந்த ப்ராப்யத்துக்கு ப்ராபகமாயுமிருக்கிறவனும், எல்லா ஆத்மாக்களுக்கும் நாயகனும், ஜனனமரணமில்லாதவனும், அடைந்தவர்களை நழுவ

விடாதவனும், முக்கியமாக அறியத்தக்கவனும், கர்மத்துக்கு வசப்படாதவனும், எல்லாவிடத்திலும் விகாரமில்லாமலிருக்கிற பிரம்மமென்றும், புருஷனென்றும், உயர்ந்த வீரியத்தோடுகூடிய வேறுவேறு குணமுள்ள கண்களையுடைய எல்லாப் பொருளின் உருவத்துடன்கூடிய பரமாத்மாவென்றும் வேதங்களில் பரக்கச் சொல்லாநிற்க. மேலும், முமுக்ஷுக்களுக்கு திருமால் திருவாராதனையும், தீர்த்தப்பிரசாதவைபவங்களும், சமாஸ்ரணமும், ஊர்த்துவபுண்டரமும், மோக்ஷத்துக்கு சாதனமென்று வேதத்தில் முடிவாயிருக்கின்றது. நாறயணனே பரத்வமாயும், அவனுடைய பதமேஸ்திரமென்றும், அவனுடைய உலகமே பரமபதமென்றும் ஆன்றோர்களால் விதிக்கப்பட்டிருக்கின்றன. சகல சப்தங்களிலும் பொருந்தி நின்ற வாச்சியனையும், விதிசிவாதிகளிடத்தில் பிரதிபக்திபண்ணி ஆராதிக்கிற ஒருவனுக்கு பலப்பிராப்தியில் நாராயணனுடைய குணத்தை வைத்துக்கொண்டே கொடுக்கிறதினாலே அந்தப் பலப்ராப்தியும் நாராயணனாலேயே கொடுக்கப்பட்டதென்றும், விதிசிவாதிகள் முதலானோர் ஆராதனை பண்ணுகிறதற்கு நாராயணனே பரமாத்மமூர்த்தியென்றும் நாராயண உபநிஷத்திலும் இன்னம் மற்றுமுள்ள வேதவேதாந்தங்களிலும் விதிசிவாதிகளாலும் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் அருமாமறையிலக்கரங்களவை யெத்தனையுண்டத்தனையும் திருமால்நாமமே யென்று சகல அந்தணரும் தினந்தோறும் அத்தியயனம் செய்கிறாரென்றும், காயத்திரிபொருளாயும், சகலசிவகோடிக்கந்தரியாமியாயும், வளர்க்கும் வேழ்வி அத்தனைக்கும் அதிபதியாயும், அண்டங்கள் பலகோடியுளதென்றும் அவ்வாறுற்ற அண்டங்களுக்கு இறைவன் உயர்மாலென்றும், நாராயணனாராதனையே யன்றி முத்திக்கு மார்க்கம் வேறில்லையென்றும், விதிசிவாதிகட்கும், ஜகத்துக்கும், சத்துவமும் உத்தியும் திருமாலிடத்திலேயே உற்பத்தியென்றும், அத்திருமாலுக்கு எந்தகாலத்திலும் அழிவில்லையென்றும், எல்லாமழிந்து எங்கும் கடலுமிருளுமாயிருக்கும்போது அத்திருமாலே தனியையாயிருக்கும் பெருமானென்றும், அத்திருமாலுக்குத் தேவியாகிய மஹாலக்ஷ்மியால் பிரளயமெல்லாம் தீர்ந்தபிறகு ஜகத்தையும் விதிசிவாதிகளையும், மறுபடியும் படைக்கிறாளென்றும், அவள் கருணையால் கோடியிலொருபங்கில் கோடிபெற்றவர் நான்முகன், முக்கண்ணன், இந்திரன் இவர்களென்றும் அனந்தவேதத்திலும் விதிசிவாதிகளாலும் நிர்மானிக்கப்பட்டிருக்கின்றதுவென்றுணருங்கள். இது நிற்க, திருமாலுக்கு அக்கிரபூசைசெய்தால் அவரவர்கள் நினைத்தபதங்களை அடைவார்களென்றும், ஸ்ரீமன் நாராயணன் குருவாகவும் விதிசிவாதிகள் முதலானவர்கள் கிளைகளாகவும், ஸ்ரிய: பதியே முத்திக்குக் கருத்தாவாகவும் சகலமான தேவர்களுக்கும் வேதங்களுக்கும் திருமகளுக்கும் நாயகனாயிருந்து அவரவர்கள் போகத்தை அனுபவிக்கிறானென்றும், சகல வேதங்களிலும் சகல ஜகத்துக்களிலும் விசாலமாய் பரந்துகொண்டு எல்லாரிடத்திலும் வியாபித்திருக்கிறானென்றும், உருவும்தேஜசும் வியாபகமும் ஓங்கும்புகழ்வீரியமும்படைத்து பிரமன் முதலாகச் சொல்லப்பட்ட பெரியோர்கட்கெல்லாம் பெரியோனாய் மால்விளங்காநின்றானென்றும்; அரியின்பரமமகிமையாகிய அதிசயகுணங்களிலே ஓர் அணுவைக்கோடிகூறிட்டு பின்பு அதிலொன்றினை அநந்தங்களாகச்செய்து அதிலொருபங்கை கோடிகூறாகச்செய்யினும் அதிலொன்றிற்குக்கூட விதிசிவாதிகள் முதலான தேவர்கள் ஒப்பிடலாகாரென்றும் சகல புவனங்களையும் ஒருதட்டிலும் அதற்குச்சமமாய் மற்றொரு தட்டில் வாசுதேவனையுஞ்சேர்த்துத் தூக்கித் தருக்கி ஆராயுமிடத்து தாமோதரந்தானே மகிமையுடையானென்றதற்கு யாதொரு ஐயமில்லையென்றும்; சகலபூதங்கட்கும் உருத்திரனுக்கும் சூரியனுக்கும் சந்திரனுக்கும்

அஷ்டவசுக்களுக்கும் முப்பத்திமுக்கோடி தேவர்கட்கும் சமுத்திரங்களுக்கும் காலப்பிரமாணங்களுக்கும் பதினாலு உலகங்களுக்கும் மற்றெல்லாவற்றிற்கும் ஸ்ரீமன் நாராயணனே பரனென்று, நாரதியபுராணத்திலும் பதினெண்புராணங்களிலும், பதினெண் உபபுராணங்களிலும், வாசகஇதைத்தொகைகளிலும், வைகாநஸ, பாஞ்சராத்திரங்களிலும், வாகடத்திலும், கானத்திலும், பரதநூலிலும், உலகோர்விதத்துச்சொல்லுகின்ற சத்தியச்சொல்லிலும், வர்க்கமகாசாஸ்திரத்திலும், நான்மறையிலும் முப்பத்திரண்டு உபநிடதத்திலும், பதினெட்டு ஸ்மிருதிகளிலும், பதினெட்டு உபஸ்மிருதிகளிலும், சோதிடத்திலும், சிற்பசாஸ்திரம் முப்பத்திரண்டிலும் இன்னும் அனேக வேதசாகைகளிலும், இராமயாணம் பாரதம் முதலியவற்றிலும் ஒப்பில்லாதவனும் சகல சத்துக்களுக்கும் வித்தாகியும் எந்தந்தப் பலங்களையும் சகிறவனும் சோதல்லாத பூசனைகளை ஒப்புக்கொண்டவனும் இருக்கின்றானென்றும் உறுதியாக வுரைத்திருக்கிறபடியாலும் அடியேனுடைய அனுபோகத்துக்கும் ஒத்திருக்கிறபடியாலும் இந்த ரகசிய உண்மைகளை இவிடத்திலெடுத்துரைக்கலானேன். ஆகையால் எனது அன்பின்மிகுந்த நண்பர்களே இந்த எதார்த்தங்களை நன்றாக ஆராய்ந்துதேறி நமது அருமையாகிய வாழ்நாட்களை இன்னம் பல நூற்களைப்பார்த்து வீண்காலம்போக்காமல் உள்ளன்புடன் வாசுதேவனென்ற ஸ்ரீமன் நாராயணனையே பற்றுறுதியால் ஒரேமனப்பட்டு ஆராதித்தும் அவரது அடியார்களைக் கண்டமாத்திரத்தில் அன்புடன் சாஷ்டாங்கமாகப்பணிந்து வேண்டிய பணிவிடைசெய்தும் அவர்களருளைப்பெற்றும் வரவேண்டுமென்று மிகவும் கேட்டுக்கொள்கிறேன்.

பரத்வநிர்ணயச்சுருக்கம் சம்பூர்ணம்.

ஸ்ரீ ஆண்டாள் ஆழ்வார் ஆசாரியர்கள் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

## வாழி.

### அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பாவலர் நீதி வாழி பூவையர் கற்பு வாழி
சாதநான் மறைகள் வாழி சாதியந் தணர்கள்வாழி
சுபாகள்பூ சனைகள் வாழி சுரந்திடும் மழையும் வாழி
பாவிநூல் செய்தோர் கேட்போர் படித்தவர் வாழிமன்றே.

மாதாடவர் நீதிபோதினி

முற்றிற்று.

Printed at the Darling Printing Press, Palamcottah.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|
| 3 | 3 | சாற்றுக்கவிகள் | சாத்துக்கவிகள் |
| ,, | 12 | சால்மதி | சான்மதி |
| ,, | 23 | இடர்தம | இடர்தப |
| 5 | 15 | சங்காகம் | சங்கிரகம் |
| 9 | 4 | கைம்புலத்தரேும்ப | கைம்புலத்தாரேும்ப |
| 10 | 9 | இவை | இவ் |
| 11 | 10 | சுதந்தரியாயிருந்தால் | சுதந்திர[illegible]யிருக்கு மவர்கள் |
| ,, | 31 | விச்கயைால் | விச்சையால் |
| 17 | 6 | மூன்று | முதல் மூன்று |
| 20 | 22 | ஸ்திரீ | ஸ்ரீ |
| 22 | 18 | உறக்கச்சிறிப்பதும் | உரக்கச்சிரிப்பதும் |
| 23 | 3 | உறங்கி | உரங்கி |
| ,, | 10 | சிலேத்துமம் | சிலேட்டுமம் |
| 24 | 9 | மலர்ந்து | மல்லாந்து. |
| ,, | 31 | உடுத்திக்கொண்டு | உடுத்துக்கொண்டு |
| 27 | 7 | ஒதற | உதற |
| ,, | 23 | தந்தையாரை | தந்தையரை |
| 28 | 8 | உருமை | உரிமை |
| 29 | 16 | தன் | தம் |
| 31 | 20 | மங்கைகட்கு | மங்கையர்கட்கு |
| 32 | 16 | கயறு | கயிறு |
| ,, | 20 | இரை | இறை |
| ,, | 21 | இரை | இறை |
| 33 | 9 | கயறு | கயிறு |
| ,, | 10 | கயற்றை | கயிற்றை |
| 34 | 1 | மங்கைகட்கு | மங்கையர்கட்கு |
| ,, | 7 | எண்ணை | எண்ணெய் |
| ,, | 9 | நிற்வாணம் | நிருவாணம் |
| ,, | 11 | செய்க்கோ | செய்துகொ |
| ,, | 21 | நிரத்தை | நிறத்தை |
| ,, | 23 | லஞ்ஜை | லஜ்ஜை |
| ,, | 29 | தமத்த | மதத்த |
| 35 | 7 | குறலையும் | குரலையும் |

| | | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|
| | 9 | புணர்ந்தகாகில் | புணர்ந்தால் |
| | 22 | யிகுந்த | மிகுந்த |
| | 17 | அதாது | அந்தந்த |
| | 18 | நோயழ்க்கு | நோயுழக்கு |
| | 19 | எண்ணெ | எண்ணெய் |
| [illegible] | 31 | யொழித்தது | யொழிந்தது |
| [illegible]0 | 20 | மழையன்றி | மழையின்றி |
| ,, | 21 | சாய்ந்து | சாய்ந்தது |
| ,, | 24 | யொழி | யொளி |
| ,, | 28 | அனுசூயை | அனசூயை |
| 43 | 8 | வாந்தாலாயினர் | வாந்தாலாயினரென்னூர் |
| 44 | 23 | விவசாரம்பி | வியபிசாரம் |
| 45 | 9 | பெருவானுகில் | பெறுவானுகில் |
| ,, | 29 | தோர்ப்பும் | தோல்வியும் |
| 46 | 19 | கரீரத்தை | சரீரத்தை |
| 47 | 17 | கண்முதாம் | கண்ணமுதாம் |
| 48 | 27 | மாக்காமல் | மறக்காமல் |
| 50 | 17 | வுருதலை | வுறுதலை |
| ,, | 30 | பொருளையும் | பொருளினும் |
| 51 | 39 | ஓர் | ஒன்றின் ஓர் |
| 52 | 2 | முப்பத்தி | முப்பத்து |
| ,, | 4 | காரிய | காரீய |
| ,, | 6 | வைகாநஸ | வைகாஙிஸ |
| ,, | 10 | இராமயாணம் | இராமாயணம் |
| ,, | 11 | எந்தந்த | எந்தெந்த |
| ,, | 17 | நூற்களை | நூல்களை |
| ,, | 26 | பரவலர் | புரவலர் |
| ,, | 30 | பரவி | பரவு |

மாதரொழுக்க நீதிபோதினி அட்டவணை.


| அத்தி யாயம். | பொருள் விளக்கம் | பக். |
|---|---|---|
| ,, | ஆக்கியோன் கருத்து | 1 to |
| ,, | சாத்துக்கவி | 3 |
| ,, | கடவுள் வணக்கம் | 4 |
| ,, | தேசத்தின் சிறப்பும் பிரார்த்தனையும் | 5 |
| 1-வது | மாதராடையொழுக்கவியல் | 6 to |
| 2-வது | மாதராடவர் நீதி | 9 to |
| 3-வது | மாதராடவர் தருமம் | 10 to |
| 4-வது | விவாஹ தருமம் | 16 to |
| 5-வது | பொது விதிகள் | 19 to |
| 6-வது | விவாஹத்துக்குரிய கற்புடைய ஸ்திரீகளுக்கு இருக்க வேண்டிய நற்குணங்கள் | 24 to |
| 7-வது | விவாஹத்துக்குத்தகாத கற்பில்லாத ஸ்திரீகளுக்குரிய தீயகுணங்கள் | 29 to |
| 8-வது | மங்கையர்கட்கு அறியவேண்டிய முக்கியமான சில சாமுத்திரிகாலக்ஷணசங்கிரகம் | 31 to |
| 9-வது | ஸ்திரீகளின் ஜாதி லக்ஷணத்தையும் அவர்களைப்புணரத்தக்க காலத்தையும் | 34 to |
| 10-வது | ஸ்திரீகளின் ஜாதி பாவத்தையும் ஸ்திரீ [illegible] ஜாதி வேறுபாடுகளுக்கேற்பப் புணர்[illegible] பேதத்தை யுமுரைத்தல் | 36 to |
| 11-வது | கற்பு நிலைமையுடைய ஸ்திரீகளின் சிறப்பும் கற்பினைக் வெளிப்படுத்தல் முதலியவைகளை [illegible] | [illegible] |
| 12-வது | வைணவ மங்கையர் வாழ்க்கைப்பாடல்: கீர்த்தனை | 42 to |
| 13-வது | [illegible] | 46 to |
| 14-வது | பாத்வ சீர்மைச் சுருக்கம் | |


(முற்றிற்று.)

N. B. இத்தொகுப்பு திருவேங்கட முடையான்பேரில் [illegible] ஸ்ரீ ஆண்டாள்பேரில் இரெட்டைவெண்பாவும் [illegible] இனி சொக்கிரம புருஷகாரபால தீர்த்தபோ[illegible], 108 [illegible] வைபவஸ்தோத்திரப்பிரபந்தமும், ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் [illegible] வைபவம் முதலான புஸ்தகங்களும் அச்சிலிருக்கின்றன [illegible] சீக்கிரத்தில் வெளிப்படுத்தப்படும்.

119383